# ஆரம்பக் கல்வி.

7

ஜூன், 1933

T15:211,N33
N33-7
190332

1224

# ஆரம்பக்கல்வி

# ELEMENTARY EDUCATION

பொருளடக்கம்

| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 245 |
| பாட புத்தகங்கள் | 246 |
| பார் ஆசிரியர் | 251 |
| எழுதப்படிக்க அறியும் கல்வி | 253 |
| கிண்டர் கார்டன் | 256 |
| சிறு கதைப் பகுதி | 258 |
| மலேயா நாட்டுப் பாடசாலை | 259 |
| ஆரம்பாசிரியர்களின் கதி | 261 |
| தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் | 265 |
| செம்பியன் ஸ்கீம் | 269 |
| சங்கக் குறிப்புகள் | 271 |
| பதில் உண்டோ? | 277 |
| உதய குமாரன் | 281 |
| ஆசிரிய மானேஜர் மகாநாடு | 285 |





190332

உள்நாடு விலை அணா 1½ மலர் 7. வெளி நாடு விலை அணா 3

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன், | | 1 0 0 |
| வெளி நாடுகளுக்கு | .... .... | 2 0 0 |

குறைந்த சந்தாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கெனவே உழைத்து வரும் சஞ்சிகை. ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும், ஆசிரிய மானேஜர்கள், தாலூக்காபோர்டு, முனிசிபாலிடி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மிஷன் பாடசாலை, பஞ்சாயத்து பாடசாலை ஒருவித உபகாரமும் பெறாத பாடசாலைகள், ஆண் பாடசாலை பெண் பாடசாலை, ஆகிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தும் "ஆரம்பக் கல்வி" என்னும் இந்த சஞ்சிகையின் மூலமாய் தத்தம் குறைகள் நீங்கி, ஆரம்பக்கல்வி யாசிரியர்களும், காலச் சக்கரத்தின் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதே நமது நோக்கம். ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் நமது சஞ்சிகையை ஆதரித்து பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, ஆசிரியர் பகுதி, கல்வி வளர்ச்சி, என்ற பகுதியின் கீழ் விஷயதானமும், பொருளுதவியும் செய்து வளர்த்த வேணுமாய்க் கோருகிறேன்.

இங்ஙனம்:
பத்திரிகை, ஆசிரியர்.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| முழுபக்கம் ஒரு தடவைக்கு | ரூ. | 10 0 0 |
| அரை பக்கம் | ,, | ,, | 5 0 0 |
| கால் பக்கம் | ,, | ,, | 3 0 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.


ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்:- பி. வீரராகவன்.

(ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)


"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


மலர், 1. | ஸ்ரீமுகஹு மார்கழிமீ 1933ஹு டிசம்பர் | இதழ், 7.



11 JUN 1935


## கடவுள் வணக்கம்.

தடித்தஓர் மகனைத் தந்தை ஈண்டு அடித்தால்
தாயுடன் அணைப்பள் ; தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன், இங்கு எனக்குப்
பேசிய் தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத்தாடும்
புனித, நீ ஆதலால், என்னை
அடித்தது போதும், அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பா, இனி ஆற்றேன்!
பதியேயெம் பரனேயெம் பரம்பரனே யெமது
பராபரனே யானந்தப் பதந்தருமெய்ஞ் ஞான
நிதியேமெய்ந் நிறைவேமெய்ந் நிலையேமெய் யின்ப
நிறத்தமிடுந் தனித்தலைமை நிபுணமணி விளக்கே
கதியேயென் கண்ணேயென் கண்மணியே யெனது
கருத்தேயென் கருத்திலுற்ற கனிவேசெங் கனியே
துதியேயென் துரையேயென் தோழாவென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே.

(திருவருட்பா)

# ஆரம்பப் பாடசாலைகளும் பாட புத்தகங்களும்

(என். வேங்கடரமணன் ஆசிரிய மானேஜர் சேலம்)

நாட்டில் ஆரம்பக் கல்வியைப் பரவச் செய்வதற் கெனத் தோன்றியுள்ள பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பப் பாடசாலைகளெனப்படும். மத்தியதர, உயர்தரக் கலாசாலைப் படிப்புகளனைத்திற்கும் அடிப்படையாக விருப்பது ஆரம்பக் கல்வியேயாம். மக்கள் சிறுவயதில் முதன் முதலாக ஆரம்பக் கல்வியைக் கற்றே அறிவு பெறுகின்றனர். மக்களின் அறிவு சிறுவயதில் எவ்வகையில் பண்படுத்தப்படுகிறதோ அதற்கேற்பவே அவர்கள் பிற்காலத்தில் உயர்வு பெறுகின்றனர். குழந்தைகளின் மாசு மறுவற்ற இளமையான மனத்தில் எவ்வித விதை ஊன்றுகிறோமோ, அதற்குத் தக்கபடியே அவர்களின் பிற்காலத்திய எண்ணங்களும், செயல்களும், குணங்களும், வளர்ச்சியடைகின்றன. ஆகையால் இனிவரும் ஜன சமூகம் ஒழுக்கமும், நன்னடத்தையும், நற்குணமும், நல்லறிவும், வீரமும், தைரியமும், தேசாபிமானமும் வாய்ந்ததாக விருக்க வேண்டுமென்றால் தற்காலத்திய குழந்தைகள் நல்ல முறையில் வளர்க்கப்படவேண்டும். குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுங் கல்வியும் அதற்கேற்றதாக விருத்தல் அவசியம். ஆகவே, ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர் சிறுமிகளை நடத்தும் முறையிலும், அவர்களுக்குக் கல்வி கற்பிக்குந் துறையிலும், பாட திட்டங்களை நிர்ணயிக்கும் வழியிலும் ஆரம்பாசிரியர்களும், குழந்தைகளின் பெற்றோர்களும், வித்தியா இலாகா அதிகாரிகளும் அதிக கவனஞ் செலுத்த வேண்டுவது அவசியம். சிறுவர் சிறுமிகள் முதலில் எழுத்துக்களைக் கற்று, பாடங்களைப் படித்து அறிவு பெறுகின்றனர். எனவே எழுத்துக்களை எளிதில் கற்றுக் கொள்ளுவதற்கும் பிழையின்றி வார்த்தைகளை உச்சரிக்கத் தெரிந்து கொள்ளுவதற்கும், பாடங்களைப் படிக்கும் முகத்தால் பல துறைகளைப் பற்றிய உலகிய லறிவை யுணர்வதற்கும், உண்மையும், ஊக்கமும், உற்சாகமும், அஞ்சாமையும், ஆண்மையும், ஆற்றலும், நன்னடத்தையும், நாகரிகமும், நாட்டுப் பற்றும், பகுத்தறிவும் படிவதற்கேற்ற சாதனங்களைப் பெறுவதற்கும் ஏற்ற முறையில் குழந்தைகள் படிக்கும் பாட புத்தகங்கள் அமைந் திருத்தல் வேண்டும். குழந்தைகளின் மனத்தில் பசுமரத்தாணிபோல் எவ்விஷயங்களும் பதியுமாகையால் ஆரம்பப் பாடசாலைகளைப் பற்றி ஒவ்வொருவரும் நன்கு கவனிக்க வேண்டும்.

190332

இன்று நந்தமிழ் நாட்டில் புற்றீசல்களைப்போல் புத்தகப் பிரசுர கர்த்தர்கள் வெளிப்பட் டிருக்கின்றனர். அவர்களில் பெரும் பாலாருடைய நோக்கம் பணந் திரட்டுவதொன்றே யாகும். இத்தகைய பிரசுர கர்த்தர்களால் எண்ணற்ற புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அப்புத்தகங்களும் டெக்ஸ்ட் புக் சங்கத்தாரால் எப்படியோ அங்கீகார முத்திரையைப் பெற்றுக் கொள்ளுகின்றன. ஆனால் அப்புத்தகங்களில் பலவற்றுள் பல பிழைகளும், முரண்பாடுகளும் நிரம்பியிருப்பதை ஆராய்பவர்கள் அறியக் கூடும். தற்போது வாசக பாடங்களாக வெளிவந்துள்ள பல வற்றுள் எழுத்துப் பிழைகளும், வாக்கியப் பிழைகளும், கருத்துப் பிழைகளும், சந்தி யிலக்கண முரண்பாடுகளும் காணலாம். வகுப்புக்களின் தகுதிக் கேற்ப விஷயங்களும், வார்த்தைகளும், வாக்கியங்களும், சந்திகளும் அமைத் தெழுத வேண்டுவது வாசக பாடங்களுக்கு இன்றியமையாததாகும். இதை நன்கு கவனித் தெழுதப் பட்ட புத்தகங்கள் மிக மிகச் சிலவே. மேற்கண்டபடி பிழைகள் மலிந்த புத்தகங்களுக்குப் பாடபுத்தகச் சங்கத்தார் எவ்வாறு அங்கீகார மளிக்கின்றனரோ அறிய முடியவில்லை. முதலிரண்டு வகுப்புகளுக் குரிய பாட புத்தகங்களில் எளிய பதங்களும், வழக்கத்திற்குரிய சொற்களும், சிறு வாக்கியங்களும், சுலபமான கருத்துக்களும், சந்திகளைச் சேர்க்காமல் பிரித்து எழுதப்பட்ட வார்த்தைகளும், இயல்புக்கு முரண்படாத சிறு கதைகளும், எளிய சந்தமும், தெளிந்த பதங்களுங் கொண்ட சிறு பாட்டுகளும், விஷயங்களை விளக்குவதற்கேற்ற தெளிவான சித்திரப் பாடங்களும் அமைத்துப் பாடங்கள் எழுதப்படவேண்டும். மேல் வகுப்புக்களுக் குரிய பாட புத்தகங்களில் மேற்கண்ட விஷயங்களைப் படிப்படியாக உயர்த்திச் செல்லலாம். தற்போது வெளிவந்துள்ள பல வாசகங்களில் மேற் கூறிய இலக்கணங்களுக்கு முரண்பட்ட விஷயங்களைக் காண்கிறோம். அத்தகைய புத்தகங்களில் ஒவ்வொன்றையுங் குறிப்பிட்டு ஆராய்ந்து பகிரங்கமாக அதில் காணுங் குறைகளை வெளியிடுவதற்கு ஆசிரியர்கள் பெரும்பாலார் அஞ்சுபவரா யிருக்கின்றனர். அவ்வாறு

துணிந்து ஆராய்ந்து எழுதும் ஆசிரியர்களின் கட்டுரைகளை வெளியிடுவதற்கேற்ற பத்திரிகைகளின் துணை கிட்டுவதில்லை. அநேக ஆசிரியர்கள் வாயளவில் இக்குறைபாடுகளைப் பேசி வருந்துவதோடு நின்றுவிடுகிறார்களே யொழிய, இக்குறையைத் தீர்க்க வேண்டிய முயற்சிகள் செய்ய முற்படுவதில்லை.

ஒரு மாணவன் ஒரு நூலாசிரியரால் முறைப்படி எழுதிய வாசக புத்தகங்களை முதல் வகுப்பிலிருந்து படிப்படியாக மேல் வகுப்புகளிலும் படித்து வந்தானுயின் வாசக நடையையும், பதங்களின் அமைப்பையும், விஷயங்களின் விவரத்தையும் முறைப்படி கற்றவனாவான். அப்படிக் கன்றி வருடந்தோறும் வாசக புத்தகங்களை மாற்றியமைப்பதால் பல குறைபாடுகள் நேருகின்றன. தற்போது ஸ்தல ஸ்தாபன சங்க (தாலூகா போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயத்து)த் தலைவர்கள் புத்தக வெளியீட்டுக் காரர் பலரைத் திருப்திபடுத்தும் நோக்கங் கொண்டு, ஆண்டு தோறும் பாட புத்தகங்களை மாற்றி யமைப்பதோ டமையாது, ஒரே ஆண்டில் முதல் வாசக புத்தகத்தை ஒரு கம்பெனியினின்றும், இரண்டாவது வாசகத்தை மற்றொரு கம்பெனியினின்றும், மூன்றாவது வாசகத்தைப் பிறிதொரு கம்பெனியி னின்றும், இவ்வாறே பாட புத்தகங்கள் பல வற்றையும் பல கம்பெனிகளிலிருந்தும் பொறுக்கி யெடுத்து, இவற்றையே இவ்வாண்டில் பாடசாலையில் படிப்பிக்க வேண்டு மென்று தமது பாடசாலைகள் அனைத்திற்கும் உத்தர விடுகின்றனர். இதன் கொடுமையை என்ன வென்று கூறுவது அடிக்கடி புத்தகங்களை மாற்றுவதால் குழந்தைகளின்பெற்றோர்கள் பண முட்டையால்படும் அவஸ்தையும், பாடங்களை போதிப்பதில் ஆசிரியர்கள் படுந்துன்பமும், பிள்ளைகள் பாடங்களைக் கற்பதில் அடையும் நஷ்டமும் பிரிவும் அதிகாரிகளின் கவனத்திற்கு எட்டுவது கிடையாது. ஸ்தல ஸ்தாபனத் தலைவர்கள் பாட புத்தகங்களைத் தேர்ந் தெடுப்பதில் தக்க ஆசிரியர்களின் ஆலோசனையையும், வித்தியா இலாகா அதிகாரிகளின் அபிப்ராயத்தையும் பெருமலேயே நடந்து கொள்ளும் எதேச்சாதிகார முறை கண்டிக்கப்பட வேண்டும். இக் குறைகளைப் போக்குவதற்கு கல்வி யிலாகா தலைவர்களும் துணைபுரிய வேண்டும்.

இது காலை நாட்டில் தேசிய உணர்ச்சி அதி தீவிரமாகப் பரவி வருகிறது. அஃது நன்மையேயாயினும் அவ்வுணர்ச்சியின் வேகத்தால் பகுத் தறிவு மழுங்கினாற்போல் பழமையி னிடத்து மூட பக்தி



யும், புதுமையி னிடத்து வெறுப்பும் வளர்ந்து வருகின்றன. இதனையே தேசீயக் கல்வி யென கூறப்படுகிறது. ட. ப. என்று ஆரம்பித்து எழுத்துக்களைக் கற்பிப்பதும், "கால் இல்லாதவன் நொண்டி, கண் இல்லாதவன் குருடன்" என்று பாடங்களைப் படிப்பிப்பதும் அறிவற்ற செய்கை யென்று தேச பக்தர்க ளெனப் பெயர் தாங்கிய பலரால் எள்ளி நகைபாடப் படுகிறது. இதன் உண்மைகளை ஆராய்ந்து எடுத்துப் பொது மக்களுக்குக் கூற வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்த தாகும். தேசீயக் கல்வி யென்று நாடெங்கும் பேசப்பட்டதன் காரணமாகத் தற்போது எழுதப்படும் வாசக புத்தகங்களில் புராணக் கதைகள் ஏராளமாகப் புகுத்தி எழுதப் பட்டதே பயனாகக் காணப்படுகிறது. இன்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட புத்தகங்களையும் சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு சிறுவனுக்குப் பூமியின் வடிவத்தைப் பற்றியும், அதன் இயல்பைப் பற்றியும் பூகோள சாஸ்திர சம்மந்தமாய் ஒரு பாடத்தைப் போதித்த பின்னர், அடுத்தபடியாக இரணியாக்ஷன் என்ற அசுரன் பூமியைப் பாயாகச் சுற்றி பாதாளத்திற்கு எடுத்துச் சென்றானென்ற பாடத்தைப் படிப்பிக்கையில் அச் சிறுவன் "இரணியாக்ஷன் எதன் மீது நின்று, எவ்வாறு பூமியைப் பாயாகச் சுற்றினான்?" என்று தனக்கேற்பட்ட சந்தேகங்களைக் கேட்கு மிடத்து, ஆசிரியர் என்ன பதிலைக் கூறலாமென்பதைச் சற்று யோசியுங்கள். இரண்டிலொன்றைப் பொய்யென விளம்ப வேண்டும். அல்லது இரண்டும் உண்மையெனச் சிறுவனை மிரட்டி வாயை யடக்கவேண்டும். அல்லாது போனால் திலகர் தயானந்த சரஸ்வதி போன்ற பெரியோர்கள் இப் புராணக் கதைக்கு எங்கே? எவ்வாறு பூகோள சாஸ்திரத்திற்குப் பொருத்தமாகத் தத்துவார்த்தங் கூறி யிருக்கிறாரென்று ஆசிரியர் தேட ஆரம்பிக்கவேண்டும். இத்தனைத் துன்பங்களுக்கும் சிறு வகுப்புகளில் இத்தகைய கதைகளை நிறுத்திவைத்துப் பிற்காலத்தில் புராணங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு ஏன் விட்டு வைக்கலாகாது? தேசீயக் கல்வி யென்பதற்கு முரண்பட்ட பொருள் கொண்டு நடந்து வரும் நம்மக்களின் அறியாமைக்கு இரங்கவேண்டியிருக்கிறது. புராணங்களி னின்றும் நாம் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறக் கூடிய நீதிக் கதைகளும் பல விருக்கின்றன. அவற்றை நாம் வெறுக்க வில்லை. வாசக பாடங்களை எழுதும் நூலாசிரியர்கள் புராணக் கதைகளில் சிறந்த வற்றை எடுத்துக் கொண்டு, அவற்றையும்

இக்காலத்திற் கேற்ற முறையில் திருத்தியோ, மாற்றியோ புத்தகங்களில் எழுத வேண்டும். ஒவ்வொரு கதையும், சரித்திரமும் பிள்ளைகளுக்கு ஒரு கற்பனையை யூட்டுவதாயிருக்க வேண்டும். கட்டுக் கதையாகட்டும் அல்லது புராணக் கதை யாகட்டும் இயற்கைக்கு மாறான அற்புதங்களோடு கூடியதாக விருத்தல் கூடாது. ஒரு உண்மை யறிவை, ஒரு நீதியை, ஒரு ஆதர்சத்தை விளக்குவதாகவே கதைகள் இருத்தல் வேண்டும். காளியைப் பூசித்துக் கவியானா னென்றும், பண்டிதனானா னென்றுங் கூறுங் கதையைப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதால் என்ன பயன் என்பதைச் சிந்தியுங்கள். அக்கதையைப் படித்த சிறுவன் கஷ்டப்பட்டுக் கல்வியைக் கற்க வேண்டு மென்பதைக் கருதாமல், தெய்வ வசியத்தால் கல்வி யாளனாய்விடலாமென்று மந்திர, தந்திர, யந்திர, பூசைகளில் தன் அறிவைச் செலுத்திக் காலத்தை வீணாக்குகிறா னென்பதில் அதிசய மென்ன விருக்கிறது? பேய், பிசாசுகளைப் பற்றிய கதைகள் சிறு குழந்தைகளுக்கு ஒரு போதும் கூறுதல் கூடாது. வீண் பீதியை விளைவிக்கும் பேய்க் கதைகளைக் கேட்கும் பிள்ளைகள் பயங்காளிகளாகவும் இருட்டைக் கண்டு மிரட்சி யடையும் கோழைகளாகவும் ஆவார்களென்பதிற் றடையில்லை. எனவே பயங்கரமான செய்திகளோடு கூடிய சாதாரணக் கதைகளும் சிறுவர்களுக்குச் சொல்லுதல் கூடாது. தற்கால வாசக பாடங்கள் சில வற்றில் பேய்களைப் பற்றிய கதைகளும் எழுதப்பட் டிருக்கின்றன. எஜமானனது காரியத்தைச் செய்யாது, தன்னிஷ்டம் போல் கோவிலுக்கோ, வேறெக் காரியத்திற்கோ செலவிட்டுவிட்டு, எஜமானனால் தண்டனையேற்றுப் பின்னர், எஜமானனை தெய்வ அருளால் திரும்பித் தண்டித்தா ரென்ற பக்தர்கள் சரிதங்களைக் (அவர்கள் எவ்வளவு பக்தர்களாயினும்) குழந்தைகள் படிப்பதால் என்ன நீதியைப் பெறுவார்களென்று வினவுகிறோம். ஒரு சிறுவன் நாளைக்கு உபாத்தியாய ரிடத்தோ அல்லது தாய் தந்தைய ரிடத்தோ பெற்றுச் செல்லும் பணத்தை ஷை யார்கள் கூறிய பதார்த்தங்களை வாங்கி வராமல் வழியில் கோயிலுக்குச் சூடம் வாங்கிக் கொளுத்திவிட்டோ அல்லது வழியில் பிச்சை கேட்பவர்களுக்குக் கொடுத்துவிட்டோ திரும்பி வருவானாயின் ஷை கதைகளைப் போதித்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் என்ன செய்வார்க ளென்பதைச் சிந்தியுங்கள். எனவே, பாட புத்தகங்களை எழுதுவதிலும், பாடபுத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் (பாடசாலைகளுக்கு) அமைப்பதிலும் ஆசிரியர்களும், பொது ஜனங்களும் வித்தியா இலாகா உத்தியோகஸ்தர்களும், பாடசாலை மானேஜர்களும் அதிக கவனஞ் செலுத்த வேண்டும். தற்போது வெளிவந்துள்ள பாடபுத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்ந்து அதன் நன்மை தீமைகளைப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிடுவதற்குத் தக்கார் முன் வர வேண்டும். ஆசிரியர் சங்கங்களில் இது போன்ற ஆராய்ச்சிகள் செய்து தீர்மானங்கள் நிறை வேற்ற வேண்டும். இது போன்ற விஷயங்களைக் கவனித்துச் சீர் திருத்தங்கள் செய்யாத வரையில் ஆரம்பக் கல்வியால் நந்நாட்டில் பெரு நன்மை விளையுமென் றெதிர் பார்ப்பதற் கில்லை யென்று எச்சரிக்க வேண்டி யிருக்கிறது.

# யார்? ஆசிரியர்

(வசுந்தர நைனார் அவர்கள், தலைமை உபாத்தியாயர் கடலாடி)

குலனருள், தெய்வம், கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,
*நிலமலை, நிறைகோல், மலர் நிகர், மாட்சியும்,
உலகிய லறிவோடு உயர்குண மிணையவும்,
அமைபவன், நூலுரை, ஆசிரி யன்னே.

என்றார் நன்னூலார். இப்பன்னிரண்டும் அமைந்தவரே ஆசிரியராம்.

*நிலம்:—பூமி. பூமியை சகல ஜனங்களும், எந்தெந்த விதமாக உபயோகித்து ஜீவிக்கிறார்களோ அவ்வித பிரயோசன முள்ளவராகவும்;

மலை:—கல், பெரிய பாறை நிறைந்த உயர்ந்தமேடு. இதில், மருந்து முதலிய இலை தினுசுகளும், வேண்டிய மரம் முதலிய விறகுகளும், ஜனங்களின் நன்மைக்காக கொடுத்துதவுவது போலவும், உயரமான மலையிலும் தோண்டினால் அங்கே தண்ணீர் சுரந்து கொடுக்கும் மாதிரி, பிறர் எந்த சமயத்தில் ஆசிரியரைத் தேடினாலும், அவர்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்பவராயும்;

நிறைகோல்:—தராசு எப்படி இரண்டு வஸ்துக்களை ஏற்ற தாழ்வில்லாமல் காட்டுமோ, அஃதேபோல் ஓர் விவகாரத்திற்கு ஆசிரியர் பாரபக்ஷ மில்லாமல் பிறர் ஒப்புக்கொள்ளுமாதிரி விவகரிப்பவராயும்;

மலர்:—புட்பம் புட்பமானது சுபா அசுப காரியங்களிரண்டுக்கும், அத்யாவசியமாவதுபோல் ஆசிரிய ரில்லா அலுவல் முடியாதென அறையும் வண்ணம் நடந்துகொள்பவராயும், எவ்விதத்திலாயினும் அயலார் ஆசிரியரை அன்புடன் தேடிவர நடந்துகொள்பவராயும், இருப்பவரே ஆசிரிய இலக்கணம் வாய்ந்தவராவர். எச் சந்தேகத்தையும் தீர்க்க வல்லுனராயிருக்க கல்விக் களஞ்சியமாக விருத்தல் அன்றோ மேன்மை. இதனாலன்றோ, "கண்டதைப் படிக்க பண்டிதனாவான்" என்னும் மூதுரையுளது.

ஆசிரியர் பலரை, அவமதிப்பாக நினைக்கும் அறியாமை நிறம்பியவர்களிடம் நாம் தனவந்தர்களாவதே மேன்மை. எதில்? கல்வியில்.

ஆகையால் உலக விவகாரங்களை உள்ளடக்கி நம்மனோ வேஷ்டைகளையும், குறைபாடுகளையும், முறையிட முன்வந்துள்ள; ஆரம்பக் கல்வி என்னும் குழவியை நாம் இனிதே ஆதரித்து பிரதி ஆசிரியரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வருவித்து வாசித்து வருதலினாலன்றோ முன் கண்ட குறையகலும். குறையகல வழிதேடா முன் நம் வாழ்க்கை இனிமையாகா. நம்முன்னோர் மனக்குறையகல உலாவி வரும் குழவியாகிய "ஆரம்பக் கல்வி" தினே தினே வளர நம்மனோ இருளகல எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக. கசடற கற்றபின், நிற்க அதற்குத்தக.

குறிப்பு:—நிலம், மலை, நிறைகோல், மலர், இவை நான்கு சூத்திரங்களும் விரிவாக அடுத்த இதழில் வெளிவரும்.

# எழுதப் படிக்க அறியும் கல்வி.

## உலகிலும் நமது தமிழ் நாட்டிலும்.

1. உலகத்தில் பல நாடுகளிலும் ஜனத் தொகையில் 100-க்கு எவ்வளவு பேர்கள் படிக்காதவர்கள் என்பது கீழ் கண்ட அட்டவணையில் காட்டப்பட்டிருக்கிறது. இது 1921-ம் வருஷத்தில் பல நாடுகளிலும் செய்யப்பட்ட ஜனக் கணக்குகளினின்று தொகுக்கப்பட்டது —

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்—பல நாடுகளில்

| | |
|---|---|
| **100-க்கு 10-க்கு குறைந்தவர்கள்:—** | |
| நார்வே | 0.0 |
| டென்மார்க்கு | 0.1 |
| ஸ்வீடன் | 0.2 |
| இங்கிலாந்து வேல்ஸ் | 0.3 |
| ஸ்காத்லாந்து | 0.3 |
| நதர்லாந்து | 0.3 |
| ஸ்விட்சர்லாந்து | 0.4 |
| ஜப்பான் | 0 9 |
| நியூஸிலந்து | 1 6 |
| ஐரிஷ் பிரீஸ்டேட் | 2.0 |
| வடக்கு அயர்லாந்து | 2.1 |
| யுனைடெட் ஸ்டேட்ஸ் (வெள்ளைக்காரர்கள்) | 2.5 |
| யூனியன் தென்னாப்பிரிக்கா | 2.8 |
| ஆஸ்திரேலியா | 4.7 |
| கன்னடா | 5.7 |
| யுனைடெட் ஸ்டேட்ஸ் (எல்லா வகுப்பாரும்) | 6.0 |
| பெல்ஜியம் | 7.9 |
| பிரான்ஸ் | 8 2 |
| ஜெர்மனி | *— |
| **100-க்கு 10முதல் 20க்கு குறைந்தவர்கள்:—** | |
| ஹங்கேரி | 15.2 |
| **20முதல் 30க்கு குறைந்தவர்கள்:—** | |
| யுனைடெட் ஸ்டேட்ஸ் (கருப்பு மனிதர்கள்) | 22.9 |
| இடாலி | 28.0 |

| | |
|---|---|
| **30முதல் 40க்கு குறைந்தவர்கள்:—** | |
| பின்லாந்து | 30.1 |
| போலாந்து | 32.8 |
| **40 முதல் 50க்கு குறைந்தவர்கள்:—** | |
| ருமேனியா | 40.5 |
| சில்லி | 40.8 |
| ஸ்பெயின் | 42.7 |
| பல்கேரியா | 46.7 |
| ஜமைகா | 47.8 |
| **50முதல் 60க்கு குறைந்தவர்கள்:—** | |
| பிலிப்பைன் தீவுகள் | 50-8 |
| **60முதல் 70க்கு குறைந்தவர்கள்:—** | |
| இலங்கை | 60.1 |
| பிரிட்டிஷ் மலேயா | 61.9 |
| மெக்ஸிகோ | 62.2 |
| யூனியன் ஸோவியட் ருஷ்யா குடியரசு | 62.3 |
| கொலம்பியா | 63.8 |
| போர்ச்சுகல் | 67.7 |
| **70முதல் 80க்கு குறைந்தவர்கள்:—** | |
| பிரெஸில் | 71.2 |
| வினிஸ-லா | 72.1 |
| நிகாராகுவா | 72.3 |

| | | | |
|---|---|---|---|
| 80முதல் 9-க்கு குறைந்த வர்கள்:— | | இந்தியா | 90.5 |
| | | எஜிப்து | 92.0 |
| சீனா | (சுமார்) 80.0 | டச் கிழக்கு இண்டீஸ் | 94.8 |
| 90முதல் 100க்கு குறைந்த வர்கள்:— | | | |

*ஜர்மனியில் அநேகமாய் யாவரும் படித்தவர்கள். கணக்கு கிடைக்க வில்லை.

| | |
|---|---|
| தென் ஆப்பிரிக்கா கருப்பு மனிதர்கள் | 90.3 |

குறிப்பு:—(1) இதில் கவனிக்கவேண்டியது யாதெனில் நம்மையும் மற்ற கீழ் நாட்டாரையும் தம் வசம் செய்து அரசு புரியும் ஆங்கிலேயர்போன்ற மேல் நாட்டவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே அநேகமாய் இல்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் காணப்படும்.

(2) படிக்கத் தெரியாத முட்டாள் தனத்தில் தென் ஆப்பிரிக்கா கருப்பு மனிதர்களும், எஜிப்து தேசத்தவர்களும், ஜாவாமுதலிய டச் தீபாந்தரங்களில் உள்ளவர்களுமே நமக்கு இணையாக இருக்கின்றார்கள். ஆதலால் வெள்ளையர்கள் நம்மை ஆளுவது ஒரு ஆச்சரியமல்ல. நாம் சுயஆட்சியுடன் ஓட்டு உரிமை உள்ள குடி அரசு செய்து வாழ வேண்டுமென்றால் நம்மவர்கள் எல்லாம் சகல ஜாதியார்களும் சரி, ஏழைகளும் பணக்காரர்களும் சரி, கல்வி கற்றுக்கொள்ள வேண்டும்.

(3) அன்றியும், அமெரிக்கா தேசத்து கருப்பு மனிதர்கள் சென்ற 80 வருஷங்களுக்குள் அடிமையிலிருந்து நீங்கினவர்கள் 100க்கு **23** பேர் போக பாக்கி எல்லாம் படித்தவர்களாக இருந்து கொண்டு நமது பழைய பெருமையைப் பேசுவதைப்போல் வேறு அவமான மொழியில்லை.

4. கீழ் நாட்டவர்களில் ஜப்பான் தேசம் ஒன்றே மேல் நாட்டாரைப்போல் கல்வியில் சிறந்து இருப்பதால் அவர்கள் அரசாட்சியிலும் வர்த்தகத்திலும் போர் திறத்திலும் மேல் நாட்டவர்களுக்குப் பின் அடையாமல் இருப்பது கவனிக்கத் தக்கது.

5. இன்னும் ஒரு காரியம், நமது நாட்டில் யாவரும் கல்வி கற்பதில் பெரியார் சிலர் அஞ்சுகிறதற்குக் காரணம், கொஞ்சம் குறையாகப் படிக்கத் தெரிந்துவிட்டால் கையால் வேலை செய்யவும் மாடு கன்று வயல் காரியங்களையும் கைத் தொழிலை செய்யவும் நாணுகிறார்



கள். இக்குணம் ஒழிய வேண்டும். மேல்நாடுகளில் அவ்விதம் இல்லாததால் தான் கல்வி ஏராளமாய்ப் பரவுகிறது.

2. இந்தியா தேசத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 100க்கு 90.5 என்பதாக மேலே உள்ள அட்டவணையில் காணலாம். இந்தியா தேசமோ பல நாடுகளைத் தன்னுள் அடக்கியது. மேற் சொல்லிய 90.5 என்பது இந்தியாவிலுள்ள எல்லா நாடுகளுக்கும் சராசரியானது. ஜனங்கள் சில நாடுகளில் மிகக் குறைவாகப் படித்தும் இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பல நாடுகளில் படித்தவர்களுடைய கணக்கு அடியில் காணலாம்.

ஆண்கள், பெண்கள் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள்,
ஆயிரத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை.

| ஆண். | நாட்டின் பெயர். | பெண். |
|---|---|---|
| 520 | பர்மா | 118 |
| 440 | திருவனந்தபுரம் | 160 |
| 397 | கொச்சின் | 113 |
| 265 | பரோடா | 34 |
| 225 | வங்காளம் | 21 |
| 214 | சென்னை | 22 |
| 184 | பம்பாய் | 24 |
| 169 | மைசூர் | 19 |
| 171 | இந்தியா | 20 |
| 150 | அசாம் | 13 |
| 126 | பீஹார் ஒரிஸா | 7 |
| 104 | மத்திய மாகாணம், பீரார் | 9 |
| 102 | வடமேற்கு மாகாணம் | 11 |
| 97 | பஞ்சாபு [டெல்லியும்] | 10 |
| 97 | ராஜபுதனம், ஆஜ்மீர் | 6 |
| 89 | ஐக்கிய மாகாணங்கள் | 7 |
| 82 | குவாலியர் | 7 |
| 67 | ஹைதராபாத் [தெற்கு] | 8 |
| 61 | காஷ்மீரம் | 3 |

இந்திய மக்களுள் அதிகமாய் படித்தவர்கள் பர்மாவிலும் மலையாளப் பிரதேசத்திலுமேயே இருக்கிறார்கள். ஹைதராபாத்திலும் காஷ்மீரத்திலும் படித்தவர்கள் மிகக் குறைவு. சென்னை ராஜதானியில் உள்ளவர்கள் நடுத்தரம். இந்த ஜாப்தாவும் 1921-ம் வருஷத்திய கணக்கையே ஒட்டியது.

# கிண்டர் கார்டன்:—அவசியம் கொள்கைகள்.

(திரு, சி. வேங்கடேச ஐயர் டிப்டி இன்ஸ்பெக்டர் பொள்ளாச்சி)

ஜீவராசிகளில் ஒவ்வொன்றிலும் அமர்ந்துள்ள பரிசுத்தமும் நிஷ்களங்கமுமான பரமாத்மாவை அறிவதும் அதன் ஒழுங்குகட்கேற்ப நடப்பதும் அதனின்றும் இப்புவியிலுள்ள ஜீவராசிகள் யாவும் அக்கடவுளின் அம்சமென்றே அறிவதும் கல்வியின் பயனெனச் சொல்வார் பெரியோர்.

நம்மிட சிறுவர்கள் தங்களிட புலன்களைச் சரிவர உபயோகித்து இவ்வுலகத்துள்ள தீயவழிகளை நீக்கி நல்ல வழிகளில் நடந்து சங்க வாழ்க்கையில் ஈடுபட்டு உதவிபுரிவதும், தேக புஷ்டி மனோ திடத்தோடும் ஜீவித்திருப்பதற்கு ஆதாரமாயுள்ள கல்வி கிண்டர் கார்டனேதான். அதன் முக்கிய கொள்கைகளாவன:—

குழந்தையின் அறிவையும் புஷ்டியையும் ஏக காலத்தில் விர்த்தி செய்வதுமன்றி அவன் மனிதனாகுங்கால் தீவிர உணர்ச்சியுடன், சுத்த எண்ணத்துடனும் கண்ணியமாகத்தன் வேலையைச் செய்யும்படி பழக்குவதே முதல் நோக்கமாகும்.

ஒவ்வொரு பொருளைப்பற்றியும் தீர ஆராய்ந்து பார்ப்பதினால் ஒழுங்கு இன்னதென்பதைத் தெரிந்து கொள்ளும் நகரவாசியாயிருக்கும்படி பார்ப்பதே இரண்டாவது கொள்கையாகும்.

ஒவ்வோர் இனத்தினரும் தம்தம் விர்த்திக்கேற்ப செய்யவேண்டியதும் அனுபவஞானம் பொருந்தியதுமான கைத்தொழில் சிக்கனம், மரியாதை, சுய நம்பிக்கை முதலியவற்றில் பழக்கி அவைகளை விர்த்தியாக்குதல்,

அழகு, ஒழுங்கு, க்ரமம் நியமம் எனப்பட்ட தன்மை அல்லது லக்ஷணங்களை யறிதலும் அதனால் மனிதருக்கு உண்டாகும் உணர்ச்சியை விளக்கிக் காட்டும்படி செய்வது நான்காவதாகும்.

சுகம் சந்தோஷம் இவைகளால் குழந்தைகட்கு உண்டாகும் திருப்தியையும் சிறு பொருள்கள் மாதிரி செய்வதால் அப்பொருள்களின் பாகங்களையும் அவைகள் பொருந்தி நிற்கும் விதங்களையும் நன்கு அறிந்து கைத்தொழில் விருத்தியையும் செய்வதே அடுத்த கொள்கையெனலாம்.

ஒருவர் மற்றொருவரை சகோதிரராகப் பாவிக்கவும் கடவுள் யாவர்க்கும் பிதாவென எண்ணவும் இடங்கொடுக்கிறது.



மனோதிடம் தேவையெனின் தேக திடம் அவசியமெனவும் இரண்டு மில்லையெனின் நல்வழியில் செல்வது இயலாதென்றும் வற்புறுத்துவதே கடைசிக் கொள்கையாகும்,

இக்காரணங்களினால் பாடசாலைகளில் கிண்டர் கார்டன் வகுப்புகள் எங்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று கூற இடமுண்டு. சிறு குழந்தைகளை விட்டுப்பிரிவதென்றால் பெற்றோர் மனம் கலங்கும். அதிலும் தாய்க்கு வருத்தம் சற்று அதிகமெனலாம். இச்சந்தர்ப்பங்களில் தம் குழந்தை பால பர்வ மடைந்து வெளியிருக்கும் பொருள்களைப் பார்த்து அறிய இச்சை கொண்டுதிரிவதோடு புதிய சினேகிதர்களைத் தேடிக் கொள்கிறான் என்ற சந்தோஷமே அவர்கள் அடையவேண்டும். கிண்டர் கார்டன் வகுப்புகளைக் பார்த்தமாத்திரத்திலேயே அநேகமாய்க் குழந்தைகள் சந்தோஷத்துடன் திரிகின்றன. சில குழந்தைகளே பாடசாலைக்குவர வருத்தப்படுவதாயிருக்கும். இக் குழந்தைகள் வீட்டில் வெகு பிரியமாகவே வளர்க்கப்பட்டவைகள். அக்காலத்து பெற்றோர்கள் சற்று பாடசாலையில் இருக்கும்படி நேரிடும். அல்லது படங்களுள்ள புத்தகங்களையோ, பொம்மைகளையோ கொடுக்கவேண்டியிருக்கும். கவனம் சற்றுமாறி கிண்டர் கார்டனில் அவாக்கொள்ளும்படி பழகவேண்டிவரும். இதுவும் முடியவில்லையாயின் இரண்டொருதினங்கள் பெற்றோர்களுடன் வீட்டிற்கனுப்பிவிட்டு, கிண்டர் கார்டனில் பழகிய குழந்தைகளும் வீட்டில் பழகும்படி செய்த பின்னர் அழைத்துவரலாம். தாயை விட்டு நீங்கியிராத குழந்தைகள் தன்னைத் தானே நம்பி தாயை விட்டுப் பிரியும்படி செய்ய ஓர் உபாயம் உண்டு.

மிருதுவான ஒரு சோபாமீது குழந்தையைப் போட்டு பின்னர் எடுத்தல், அல்லது வீட்டின் அறைகள் ஒன்றில் குழந்தையை விட்டு வைத்துத் தாய் மறைந்து நின்று சற்று நேரம் சென்று வந்து எடுத்தல் இவைபோன்ற செய்கைகளால் நாளடைவில் குழந்தை தாயை விட்டுப் பிரிந்திருந்தாலும் சற்று வருத்தமின்றியே இருக்கும் பழக்கம் ஏற்படுகிறது. குழந்தை வீட்டிற்குத் திரும்பி வந்தவுடன் பாடசாலையில் செய்துள்ள வேலைகளைப்பற்றி வினவினால் பரோபகாரம், கடவுள் பக்தி, ஒழுங்கு முதலியவைகளைப் பதியச் செய்தவளாகிறாள். கிண்டர் கார்டனில் பழகும் குழந்தைகள் எல்லாம் ஒரே தன்மையன அல்ல. சில சுய நலத்தை தேடும், சில பரோபகாரத்தையே நாடும்; மற்றும் சில அஜாக்கிரதையாயிருக்கும், சில வெட்கப்படும், சில

# சிறு கதைப் பகுதி

## "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்"

மதுரை என்று ஒரு பட்டணம். அதன் அரசன் பாண்டியன். அவரிடத்தில் ஒரு மந்திரி இருந்தார் அம்மந்திரியின் பெயர் மாணிக்கம். அவர் நன்றாய்ப்படித்தவர். கடவுளிடத்தில் அன்புடையவர். அரசன் மந்திரியிடம் குதிரை வாங்கிவரும்படி பொன் கொடுத்தனுப்பினார். மந்திரி புறப்பட்டுப் போனார். போகும் வழியில் ஒரு கோயில் இருந்தது. கோயிலைப் பார்க்க உள்ளே சென்றார். அங்கே ஒரு மரம் இருந்தது அதனடியில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார் அவரைச் சுற்றிலும் சிலர் உட்கார்ந்திருந்தனர். மந்திரி அவரைப் பார்த்தார். ஓடிவந்தார். வணங்கினார். எனக்கு நல்ல புத்தி சொல்லவேண்டும் என்றார். பெரியவர் கடவுளைத் தொழுவர் கோயிலை நன்றாய்க்கட்டு என்றார். மந்திரி, கையிலிருந்த பொன்னால் அழகான கோயில் கட்டிவிட்டார். அங்கேயே இருந்துவிட்டார். அரசன் தேடினான். ஆட்களை அனுப்பிப் பிடித்துக் கொண்டு போனான். குதிரை எங்கே என்றான். குதிரைவரும் என்றார். யார் கொண்டுவருவார்? என்றான். கடவுள் கொண்டுவருவார் என்று சொன்னார். கொஞ்ச நாள் பார்த்தான். குதிரைவரவில்லை. மந்திரியைத் தண்டித்துச் சிறையில் அடைத்தான். மந்திரி சிறையில் அடைத்தான். மந்திரி சிறையில் கடவுளைத் துதித்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நாள் ஆயிற்று. ஒரு நாள் காலையில் குதிரைகள் வந்தன. பெரிய பெரிய குதிரைகள். அழகுள்ளவை. கொண்டு போய் லாயத்தில் கட்டினார்கள். மந்திரியை விட்டுவிட்டான். இராத்திரி ஊரெல்லாம் சத்தமாயிருந்தது. என்ன சத்தம். நரி ஊளையிடுகிற சத்தம். ஏது நரி, குதிரை எல்லாம் நரியாய் விட்டன. பாண்டியனுக்குக் கோபம் வந்தது. மந்திரியை சிறை செய்தார். கடவுள் நம்மைக் காப்பாற்றுவார் என்று துதித்துக் கொண்டிருந்தார். முன் நரியைக் குதிரையாக்கியது யார். குதிரைகளை நரிகளாக்கியது யார். எதற்காக இப்படிச் செய்தார். என்று எண்ணுங்கள். கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்று தெரியவில்லையா.

---

குழந்தைகள் அதிகாரம் செய்யும் தோரணையாய்ப் பேசும். இக் குழந்தைகளின் தனிமைக் கேற்ப அவைகளை நன்கறிந்து தகுந்தபடி விளையாட்டாகவே கெட்டவழிகளை விலக்கி சத்வழிகளில் நாடும்படி செய்வதே கிண்டர் கார்டன் உபாத்தியாயினியின் கடைமையாகும். இதைப்பற்றி யினி பேசுவாம்.

# மலேயா நாட்டில் தமிழ் ஆரம்ப பாடசாலைகளின் நிலைமை

தற்போது மலேயா நாட்டில் 624000 இந்தியர்கள் இருக்கின்றனர் அதில் 515000 பேர் தமிழர்கள் தமிழ் மக்களின் குழந்தைகள் படிப்பதற்காக 333 ஆரம்பப் பாடசாலைகள் மலேயா நாட்டில் நடைபெற்றுவருகின்றன. அதில் 12640 குழந்தைகள் தமிழ் வாசிக்கின்றார்கள். சீனக் குழந்தைகளுக்கென 377 பாடசாலைகள் சீனபாஷையில் நடைபெற்றுவருகின்றன. கடந்த அக்டோபர் மாதம் 30ம் தேதி சிங்கப்பூரில் நடந்த சட்டசபையில் மலேயா நாட்டு கவர்னர் ஸர். ஸெஸில், கிரவுமென்டி "இனிமேல் மலேயா பாடசாலைகள் தவிர்த்து மலேயா அல்லாத தமிழ், சீனம் கற்றுக்கொடுக்கும் ஆரம்பப் பாடசாலைகளை மலேயா அரசாங்கம் அங்கீகரிக்காதென்றும் இனி தமிழ் சீனம் கற்க வேண்டுமானால் தமிழர்கள் இந்தியாவுக்கும் சீனர்கள் சைனாவுக்கும் செல்லவேண்டுமென்றும் தெரிவித்தார்" இதைக் கேட்க ஒவ்வொரு தமிழர் மனமும், இந்தியர்கள் மனமும் திடுக்கிடாமல் இருக்க முடியாது நம் நாட்டில் குடியேறின எல்லா அன்னிய நாட்டுமக்களின் குழந்தைகளுக்கும் சமமாக அவரவர்கள் தாய் பாஷையில் கூடுமானவரையில் கல்வி கற்றுகொடுக்கின்றோம். நமது இந்திய நாட்டுமக்களுக்கு அன்னிய நாட்டில் கல்வி கற்கக் கூட சுதந்திரம் இல்லையேல் அது இந்தியர்களுக்கு மாத்திரமல்ல நமது இந்திய கவர்ன்மெண்டாருக்கும் இது ஒரு பெரிய அவமானம்தான். இதைப் பற்றி இந்திய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறதோ பார்க்கலாம்?

---

# மடங்களில் வசிப்போர்க்கு தீர்க்காயுள்.

சசெக்ஸைச் சேர்ந்த கொளபோல்டிலுள்ள கார்துஸியன் பாதிரிகள் அடியோடே சாகபக்ஷிணிகள் என்று சொல்லக் கேட்க ஆகாரச் சீர்திருத்தக்காரர்கள் சந்தோஷப்படுவார்கள். அந்த மடத்தில் வசிக்கும் பாதிரி சன்னியாசிகள் ட்ராபிஸ் மடத்தாரைப்போல் மௌனிகள். அவர்கள் வாழ்வே அதிக கடினம். மாமிசம் அவர்கள் உணவில் சேருகிறதே கிடையாது. ஆகிலும் அவாகள் வெகு நாள் வாழ்ந்தவர்கள். அவர்கள் கல்லறையில் கடைசியாகப் புதைக்கப்பட்டவரின் வயது 89 70 வயதுள்ளவர்கள் கூட சிரமமின்றியே உழுது இருக்கும் வயல்களின் வழியாய் ஒன்று அன்று இரண்டு கோணிகள் நிறைய தானியத்தைத் தூக்கிக் கொண்டு செல்வது சகஜம்.

இந்தப் பாதிரி சன்யாஸிகள் தங்கள் ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கும் தீர்க்காயுளுக்கும், தாங்கள் வாழும் கடினமான வாழ்வே காரணம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் உடை தரிக்கிறதில்லை அவர்கள் படுக்கைகள் பலகைகள் தாம். அவர்கள் வசிக்கும் நெருங்கிய குகைகளில் உஷ்ணம் கொடுக்கும் உபாயம் ஒன்றுமில்லை. தீராத சந்தர்ப்பங்களில் அதை உஷ்ணப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவர்கள் ஆகாரம் மரக்கறி பதார்த்தங்கள், பழம், ரொட்டி, எப்போதாகிலும் கொஞ்சம் மீன். சாதாரணமாய் தினம் அவர்களுக்கு ஒரே வேளை சாப்பாடு. பகல் 12-மணிக்கு முன்னாக தங்கள் குகைகளில் தனியாக உட்கார்ந்து உண்கிறார்கள். அவர்களுக்கு நோ வென்பதே கிடையாது.

வருஷத்திற்கு ஒரு முறை அவர்கள் உறவின் முறையார் வர்அகளை வந்து பார்ப்பதற்கு உத்திரவு உண்டு என்று இவ்வாறு டெயிலி மெயிலில் எழுதப்பட்டிருக்கிறது.

---

## மோர் அழகைத் தரும்.

---

சுலபமாய் உனக்கு மோர் கிடைக்குமானால், உன் தேகத்தை அழகாகச் செய்துகொள்ள அது உபயோகமுள்ளதாக விருக்கும். அதை உள்ளுக்கும் சாப்பிடலாம். மேலுக்கும் உபயோகிக்கலாம். உன்னால் கூடிய அளவு மோரைக் குடி. அதற்குப் போஷணை சக்தி அதிகம் இருப்பதால், ஒரு டம்பளர் மோர் குடித்தால் அது இரண்டு அவுன்ஸ் முழுக்கோதுமை ரொட்டிக்குச் சமானமான போஷிப்பைத் தரும். குளிர்ச்சியுள்ளதும் களையைத்தீர்க்கும் படியானதும், தாகத்தை தணிக்கும் படியானதுமான வஸ்து. இதற்கு இணை ஒன்றுமில்லை.

மேலுக்கு உபயோகிப்பதற்கு, முகம், கழுத்து, கைகால்கள் இவைகளின் மேல் கையால் எடுத்துப் பூசிக்கொள். கடற் பஞ்சு அல்லது கம்பளத்துண்டை உபயோகிக்காதே. மோரைக் கொண்டு சர்மத்தை இரண்டு நிமிஷம் வரையில் மெதுவாய்ப் பிடித்துவிடு. பிறகு அது உலரும்படி விட்டுவிடு. வெய்யலும் காற்றும் பட்டால், சிரேஷ்டம். சர்மத்தை ஸாடினைப் போல் மழமழப்பாயும், புதிதாயும், மிருதுவாயும் ஆக்கும். உஷ்ண வெடிகளை வரவொட்டாமல் காக்கும்.

## 45000 போதனா முறை பயிலாத ஆரம்பாசிரியர்களின் கதி என்ன?

தற்போது நமது இராஜதானியில் ஏறக்குறைய 108000 ஆரம்பாசிரியர்கள் உழைத்துவருகின்றார்கள். அதில் ஏறக்குறைய 45000 ஆசிரியர்கள் போதனா முறை பயிலாதவர்கள். இவர்களுக்கு இனி கிராண்டு கொடுக்கா வண்ணம் அரசாங்கத்தார் சில ரூல்களை மாற்றி ஜி. ஒ. நெ. 1854 (7-10-33)ல் வெளியிட்டு, நவம்பர் 7ல் பிரசுரமான கெஜெட்டில் பொதுஜன அபிப்பிராயத்திற்கு வெளியிடப் பட்டிருக்கிறது. இது ஒரு விந்தையான உத்திரவு. ஐயோ பாவம்! இந்த அருமையான உத்திரவை பிறப்பிக்க எத்தனை கல்வி அதிகாரிகள் மூளை கஷ்டப்பட்டனரோ? இவ்வளவு கஷ்டமென்ன 144 செக்ஷனைப்போல் ஒரு ரூலைப் போட்டு ஆரம்பாசிரியர்களெல்லாம் இனி பி. ஏ. படித்தவர்களாக இருக்கவேண்டும், மற்றவர்களுக்கு கிராண்டு கிடையாதென உத்திரவு போட்டு விட்டால் சீக்கிரம் நமது நாட்டில் கல்வியைப் பரப்பி விடலாமே!

இருக்கட்டும் உலகத்தில் கல்வியில் முற்போக்கடைந்த பல நாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கின், அதில் போதனா முறையில் தேர்ந்தவர்களும் தேறாதவர்களும் கலந்துதான் கல்வித் தொழிலை நடத்தி, தங்கள் நாடுகளை முன்னுக்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். போதனா முறை யென்றால் என்ன? வயிற்றின் கொடுமையால் ஏதோ சில பாடங்களை உருச்செய்துபாஸ் செய்து விட்டால் வயிற்றை வளர்க்கத் 20 ரூபாய் உத்தியோகம் கிடைக்காதா என்ற ஏக்கங்கொண்டு பயின்று வரும்முறையா போதனா முறை? தற்போது போதனா முறை பயின்ற ஆசிரியர்களில் காலணாவுக்கு கிடைக்கும் சதகங்களுக்கு பதவுரைபொழிப்புரை சொல்லவல்லவர்கள் எத்தனைபேர்? $\frac{1}{4}$, $\frac{1}{2}$, கணக்கில் மனக்கணக்குகளைக் கேட்டால் சரியான விடை கொடுக்க சக்தி யுள்ளவர்கள், எத்தனைபேர்? தைர்யமாகச் சென்று தாய் தந்தையர்களிடத்திலோ, பொது ஜனங்களிடத்திலோ, கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லிப் பேசச் சக்தி வாய்ந்தவர்கள் எத்தனைபேர்? சுகா

தாரத்தைப்பற்றி தெரிந்தவர்கள் எத்தனை பேர்? பொதுஜன சேவையைப்பற்றி அறிந்தவர்கள் எத்தனைபேர்? தியாகம் என்பதைப்பற்றி உணர்ந்தவர்கள் எத்தனைபேர்? நமது தேச சரித்திரத்தையும் பூகோள வர்ணனையும், சரியானபடி அறிந்தவர்கள் எத்தனைபேர்? எல்லாம் போதனா முறையில் தேர்ந்த உபாத்தியாயர்கள் தான். நாம் இவ்விதம் கூறும்பொழுது போதனா முறை பயின்ற ஆரம்பாசிரியர்களைத் தாழ்த்திக் கூறினதாக எனது ஆரம்பாசிரிய சகோதரர்கள் நினைத்தலாகாது. அத்தகைய குறைபாடு ஆரம்பாசிரியர்கள் குற்றமன்று. சட்டியிலிருந்தால் தானே அகப்பைக்குக் கிடைக்கும். தற்கால போதனா முறை பாடசாலைகள் நடந்துவரும் போதனா முறை அத்தகையது. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஸ்டைபெண்டுமில்லாமல் மாணவர்கள் அநேகர் ஆசிரியர் வேலைக்கு சேரத் தயாராயிருக்கின்றார்கள். புத்தகங்களை பிரசுரம் செய்ய கம்பெனிகளும் அதிகமாக இருக்கின்றன. பரீட்சை வைப்பதற்கும், திருத்துவதற்கும், போதகாசிரியர்கள் ஒரு பக்கம் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றனர். தற்காலம் நடைபெறும் போதனா முறை பயிற்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்க ஏற்படுத்தப் பட்டிருக்கிறதா என்பது எமது சந்தேகம். இதைப்பற்றி இன்னொரு முறை தெளிவாக எழுதுவோம். இந்த நிலையில் ஏன் அரசாங்கத்தார் போதனாமுறை பயின்றவர்கள் தான் மேதாவிகள், போதனா முறை பயிலாதவர்கள் திறமை யற்றவர்கள் ஆரம்பக் கல்வியை பரப்பயோக்கியதை யற்றவர்களென நினைக்கின்றதோ தெரியவில்லை. திறமை யற்றவர்களும், மேதாவிகளும் இரண்டிலுமுண்டு.

முகம்மதியர் அரசியலிலும் கூட நமது நாட்டில் ஒவ்வொரு கிராமத்திற்கு ஒவ்வோர் பள்ளி இருந்ததாகவும், மக்கள் படிப்பில் பெருவாரியாக தேர்ந்திருந்தார்கள் எனவும், ஆங்கில ஆட்சிக்குப் பின்னரே அது குறைவு பட்டதென்பதை நிரூபிக்க பல அத்தாட்சிகளிருக்கின்றன. அக்காலத்திலிருந்த ஆசிரியர்கள் எக் கலாசாலையில் போதனா முறை பயின்றனர்? ஆதலின் போதனாமுறையில் பயின்றவர்கள் தான் ஆசிரியர் தொழில் செய்ய அருகர். ஏனையோர் அருகரல்லர். என்ற பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை, இதனால் போதனா முறை பயிலாத உபாத்தியாயர்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தென்பது நமது நோக்கமன்று. கூடுமானவரையில்



போதனா முறையில் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களை, நாளுக்கு நாள் தேர்ச்சி பெற்றவர்களாக்க பல வசதிகளை ஏற்படுத்த தேர்ச்சி பெறாத ஆசிரியர்களின் தொகையைக் குறைக்க வேண்டும். போதனாமுறை பயிலாத வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்கும் அல்லது ஆசிரியர்தொழிலில் ஸர்விஸ் அதிகமுள்ளவர்களுக்கும் தேர்ச்சி பெற்ற யோக்கியதா பத்திரங்களைக் கொடுத்து அவர்களைத் தேர்ச்சி பெற்றவர் கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டும், நாளுக்கு நாள் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்கள் தொகையை குறைக்க வழிதேட வேண்டுமேயொழிய, திடீரென இத்தகைய ஆபத்தான மாறுதல்களைச் செய்யக்கூடாது. அவ்விதம் செய்யின் குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாக முடியும். அரசாங்கத்தின் நோக்கமெல்லாம் மக்களுக்கு சீக்கிரத்தில் கல்வி பரப்பும் வகையிலேயே இருக்கவேண்டும். கடந்த பத்து வருடங்களாக படித்தவர்கள் தொகை நூற்றுக்கு பத்துபேர்களுக்கதிகமாகவில்லை. பணமோ ஒட்டிக்கு இரட்டையாக செலவாகி வருகின்றது. ஓட்டைச் சட்டியானாலும் குழக்கட்டை வேகுவதுதான் முக்கியமே யொழிய சட்டியைப்பற்றி நமக்கு கவலை வேண்டாம். சந்தர்ப்பத்திற்கு தக்கபடி எங்கெந்த இடங்களில் எம்மாதிரியான உபாத்தியாயர்கள் அகப்படுகின்றார்களோ அவர்களைக் கொண்டே ஆங்காங்கு குறைந்த செலவில் ஆரம்பக் கல்வியை பரப்பும் வகையில் கல்வி யதிகாரிகள் உழைத்து வரல் வேண்டும்.

நமது நாடும் இதர நாடுகளைப் போல் கல்வி யறிவுடைய மக்கள் நிறைந்த நாடென சீக்கிரத்தில் விளங்கும்படி செய்ய வேண்டும். அதைவிட்டு கல்வி யதிகாரிகளும், அரசாங்கத்தாரும் அனாவசியமாக அடிக்கடி ரூல்களை மாத்துவதும், குறைப்பதும், சேர்ப்பதுமான விஷயங்களில் தலையிட்டு தங்கள் அருமையான காலத்தைக் கழித்து விடுவதைக் காட்டிலும் கல்வி சம்மந்தப்பட்ட மட்டில் ஆசிரியர்களுடன் ஒத்துழைத்து ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கென உழைப்பார்களென நம்புகின்றோம்.

அவ்விதம் திருத்துவதாகவே வைத்துக்கொள்வோமானால் ஆரம்பக் கல்வியின் கதியென்ன? அநேக உபாத்தியாயர்கள் வேலை யில்லா திண்டாட்டத்தில் சேர வேண்டிவரும். ஏககாலத்தில் திடீரென தேர்ந்த உபாத்தியாயர்கள் அகப்படமாட்டார்கள். இக்காலத்தில் கிராண்டுகளெல்லாம் நூற்றுக்கு இருபது, இருபத்தைந்து, குறைந்த கணக்கிலேயே இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் அநேக

எய்டட் பாடசாலை மானேஜர்கள் தேர்ந்த உபாத்தியாயர்களை வைத்து பாடசாலைகளை பரிபாலனம் செய்ய முடியாது.

## பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஆரம்பாசிரியர்கள் போதனா முறை பயின்றவர்களும், பயிலாதவர்களும்

| | உபாத்தியாயர் மொத்த தொகை | போதனாமுறை பயின்றவர் | போதனாமுறை பயின்றவர் 100-க்கு |
|---|---|---|---|
| சென்னை | 83854 | 40809 | 48 |
| பொம்பாய் | 30437 | 14663 | 48 |
| வங்காளம் | 61132 | 15671 | 25 |
| ஐக்கிய மாகாணம் | 35332 | 23486 | 66 |
| பஞ்சாப் | 11668 | 6224 | 53 |
| பர்மா | 5795 | 2512 | 43 |
| பீஹார் ஒரிஸ்ஸா | 39000 | 14625 | 37 |
| மத்திய மாகாணம் | 10000 | 4658 | 46 |
| அஸ்ஸாம் | 6045 | 2220 | 36 |
| பிரிட்டிஷ் இந்தியா | 285694 | 126291 | 44 |

அநேக பாடசாலைகள் மூடப்பட்டுவிடும். அநேக மாணவர்கள் படிப்பின்றி தெருத்திரிந்து வரநேரிடும். ஏற்கெனவே பாடசாலையில் வாசிக்க வயதுவந்த பிள்ளைகள் ஆயிரக் கணக்கில் படிக்க சௌகரியங்களில்லாமலலைந்து திரிந்து கொண்டிருக்கின்றனர். கட்டாய இலவசப் படிப்பெல்லாம் பெயரளவில்தான் நிற்கின்றது. கட்டாயமும் கிடையாது. இலவசமும் கிடையாது. பணக்காரப் பிள்ளைகள் தான் இலவசமாகப் படிக்கின்றனர். ஏழைப் பிள்ளைகளின் கதி பழைய நிலையில் தான் இருந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் 45000 உபாத்தியாயர்களுக்கு கிராண்டு இல்லை, 'இவர்கள் வேண்டியதில்லை, யென்றால் ஆரம்பக் கல்வியின் கதியென்ன? இதுகாறும் உழைத்து வந்த ஆசிரியர்களின் கதியென்ன? இதையெல்லாம் தீரயோசித்து அரசாங்கத்தார் ரூலைத் திருத்தாமல் பழையமாதிரியாகவே எல்லா ஆசிரியர்களுக்கும் கிராண்டு கொடுக்கும் விதமாய் விட்டு விடுவார்களென நம்புகின்றோம்.

பத்ராதிபர்.

ஓம்: தத். ஸத்:.

# எய்டட் எலிமென்டரி பாடசாலைகளும் தேர்ச்சி பெறாத ஆரம்பாசிரியர்களும்

கடந்த நவம்பர் மாதம் 7ம்தேதியன்று வெளியிட்டுள்ள போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் கனம் கல்வி மந்திரியவர்கள் 1920ஸு ஆரம்பக் கல்வி சட்டத்தின் கீழுள்ள, சில ரூல்களை திருத்தம் செய்து அதனால் யாருக்காவது பாதிக்கப்படுமானால் அது விஷயத்தை அரசாங்கத்திற்கு டிசம்பர் 7ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டுமென்பதாக பொதுஜன அபிப்பிராயத்திற்கு வெளியிட்டிருக்கின்றார். அவ்விதம் திருத்தப்படவேண்டுமென்கிற ரூலில் பலவனவற்றுள் முக்கியமாக தேர்ச்சி பெறாத ஆரம்பாசிரியர்களுக்கு கிராண்டு கொடுக்கும் விஷயத்தைப் பற்றியது (ரூல்ஸ் பர் எய்ட்) ஒன்று.

அதாவது தற்போதுள்ள ரூலில், தேர்ச்சி பெறாத லோயர் கிரேட் உபாத்தியாயர்களை 1932ஸு ஜனவரி மாதம் 16 தேதிக்குள் உபாத்திமைத் தொழிலில் அமர்த்தப்பட்டிருப்பின் அவர்களுக்கும், ஹையர், செகண்டரி, முதலிய கிரேட்டிலுள்ள தேர்ச்சி பெறாத ஆசிரியர்களுக்கும், பலவித கிரேட்டிலும் போதனா முறைப்பாடசாலையில் வாசித்துப் பரிட்சைக்குச் சென்று எழுதும் பரீட்சையில் தேர்ச்சிபெறாத ஆசிரியர்களுக்கும், எழுத்துப் பரீட்சையில் தேர்ந்து தங்களுடைய சர்ட்டிபிகேட்டை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களுக்கும், பூர்த்திசெய்த ஆசிரியர்களுக்கும், பிரபேஷனரி தேர்ச்சிபெற்ற உபாத்தியாயர்களுக்கும், கிராண்டுகள் கொடுக்கலாமென்பதாக இருந்தது. ஆனால் தற்போது அவ்விதமல்லாமல், எல்லா கிரேட்டிலுமுள்ள தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களுக்கும், போதனா முறை பாடசாலையில் பயின்று எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி பெறாதவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட ஜாதியாரல்லாத இதர லோயர் கிரேட் ஆண் உபாத்தியாயர்கள் பிரபேஷனரி சர்ட்டிபிகேட்டை உடையவர்களாயிருப்பின் அவர்கள் வேலை செய்யும் பாடசாலை அவர்கள் போதனா முறை பாடசாலையை முடித்துவிடும் வருஷத்திலேயே திறக்கப்பட்டதாக இருக்க வேண்டுமென்றும், அவ்வித பாடசாலையில் வேலை செய்யாத லோயர் கிரேட் உபாத்தியாயர்களுக்கும் கிராண்டு கொடுக்கப்பட மாட்டாது என்பதாக ஓர் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

போதனா பயிற்சி யில்லாத உபாத்தியாயர்களையும் சரியான

கல்வி யறிவில்லாத உபாத்தியாயர்களையும் பாடசாலைகளில் போதகாசிரியாக அமர்த்துவது தகுதியான முறையல்ல வென்பது உண்மையே. ஆயினும் திடீரென இத்தகைய முறையை கையாளுவதில் பிரயோஜனமில்லை. ஆரம்பக் கல்வியின் உலகப் போக்கையும், கால சந்தர்ப்பங்களையும் நன்றாக ஆராய்ந்து படிப்படியாக தேர்ச்சிபெறாத உபாத்தியாயரைக் குறைக்க முயலவேண்டுமே யல்லாமல், திடீரென 45000 தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களை குறைக்கவேண்டு மென்றால் அது முடியாத காரியம். எத்தனை வருடங்களாகவோ பலவிதமாக யோசித்து யோசித்து கடந்த வருடந்தான் லோயர் கிரேட் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களை இனிமேல் வைக்கவே கூடாதென உத்திரவை அரசாங்கத்தார் பிறப்பித்தனர். இந்த லோயர் கிரேட் உபாத்தியாயர்கள் அறவே ஒழிய எத்தனையோ வருடங்களாகும். இந்த லோயர் கிரேட் உபாத்தியாயர்களையே அறவே மாற்ற முடியாத நிலையில் அரசாங்கமிருக்க இதர கிரேட் உபாத்தியாயர்களை எவ்வாறு எடுத்துவிட முடியும். தற்போதுள்ள நிலையை நோக்கின் ஹையர் கிரேட் உபாத்தியாயர்களையோ செகண்டரி கிரேட் உபாத்தியாயர்களையோ எடுத்துவிட வேண்டுமென்பது கைகூடாத காரியமென்பதில் ஐயமில்லை. தேர்ச்சி பெறாத ஹையர் கிரேட் உபாத்தியாயர்களையும், செகண்டரி கிரேட் உபாத்தியாயர்களையும், அதிகமாக வைப்பதினால் தான் தேர்ச்சி பெறாத லோயர் கிரேட் உபாத்தியாயர்களையும் குறைக்க வழியேற்படுகிறது. இன்னும் போதனாமுறைப் பாடசாலையில் சேரவேண்டுமானால் அங்கீகாரம் பெற்ற பாடசாலையில் சில மாதங்கள் மாணவர் ஆசிரியராக வேலை பார்க்க வேண்டுமென்கிற நிபந்தனையும் எடுகேஷனர் ரூலில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களை வைத்துக் கொண்டால் அவர்களுக்கு கிராண்டு இல்லை யென்று சொல்வது தகுதியாகக் காணப்படவில்லை.

இது இப்படியிருக்க டைரக்டர் துரையவர்கள் ரிபோர்ட்டை சீர்தூக்கிப் பார்ப்போம். ஒவ்வொரு வருடமும் டைரக்டர் துரையவர்கள் எய்டட் பாடசாலைகளில் நூற்றுக்கு 75 விகிதம் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களிருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார். தற்போதுள்ள போதனா முறைப் பாடசாலைகளில் வருடா வருடம் சேர இடமில்லாமல் அநேக மாணவர் வீடு திரும்புகின்றனர். இந்த நிலையில் ஏறக்குறைய 45000 உபாத்தியாயர்களையும் போதனா முறையில்



தேர்ச்சிபெற வேண்டிய வசதிகளைச் செய்ய பண நெருக்கடியான நிலையில் அரசாங்கத்தார் முடியக்கூடுமான காரியமா? இருக்கட்டும் தற்போது எல்லா தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களையும் எடுத்துவிடுவதாக வைத்துக்கொள்ளுவோம். ஏக காலத்தில் ஆயிரக் கணக்காக தேர்ச்சி பெற்ற உபாத்தியாயர்கள் இருக்கின்றார்களா? தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களும் இல்லாமல் யில்லாத ஆசிரியர்களுக்கும் கிராண்டு கிடையாதென்றால் எய்டட் பாடசாலைகளின் கதிதான் என்ன? எய்டட் மானேஜ்மெண்டிற்கு பண கஷ்ட மொருபுறமிருக்க, பாடசாலைகளில் சரியான ஆசிரியர்களில்லாமலும், பாடசாலைகளும் திறமையாக நடைபெறாமல், பொதுவில் நமது இராஜதானியில் ஆரம்பக் கல்வி சீர்கேடடையுமென்பதில் ஐயமில்லை. இன்னும் போதனா முறைப் பாடசாலையில் பயின்றும் எழுத்துப் பரிட்சையில் தேறாத ஆசிரியர்களுக்கும், பிரபேஷனரி ஆசிரியர்களுக்கும் கிராண்டுகள் இல்லையானால் கவர்ன்மெண்ட் ரூல்கள் பிரகாரம் பாண்டுகளை பூர்த்தி செய்யாதவர்களாய் வேலையில்லாமல் திண்டாட வேண்டியதாயிருக்கின்றது. இன்னும் ஏதோ சிறு வகுப்புகளை யெல்லாம் பெரிய பாடசாலைகளில் இணைக்கவேண்டுமென்கிற புது முறையான ஒரு திட்டம் வரப்போவதாக பிரஸ்தாபமாக இருக்கின்றது. ஒரு சமயம் இப்புது திட்டம் அமுலுக்கு வருமானால் அநேக ஆசிரியர்கள் வேலை யில்லாத் திண்டாட்டத்தில் சிக்க வேண்டிவரும், இரண்டாவதாக மானேஜ்மெண்டுகளுக்கு திறமையான உபாத்தியாயர்களை தேர்ந்தெடுக்க இயலாது, அநேக எய்டட் பாடசாலைகளில் மானேஜர்களே ஆசிரியர்களாக இருப்பதினால் அவர்கள் போதனா முறைக்குச் சென்று திரும்பிவந்ததும் அவர்களுக்கு கிராண்டு இல்லையெனில் எவ்வாறு பாடசாலைகளை நடத்த முடியும். இதை யெல்லாம் அரசாங்கத்தார் நன்றாக யோசித்து (எய்ட்) சம்மந்தப்பட்டமட்டில் திருத்தம் செய்வதாக வெளியிட்டுள்ள ரூல்களை ஒன்றும் மாற்றாமல் பழைய மாதிரியாகவே விட்டு விடுவார்களென நம்புகின்றேன்.

கே. இராமாநுஜம் பிள்ளை, (மாகாண காரியதரிசி)
சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் சங்கம்
நெ. 51, வெங்கடாசல நாய்க்கன் தெரு,
ராயபுரம், சென்னை.

## செம்பியன் ஸ்கீம் கண்டிக்கப்பட்டது.

29-12-33ல் தெல்லிச் சேரியில் நடந்த ஒரு முகம்மதியர் பொதுக் கூட்டத்தில் செம்பியன் ஸ்கீமைக் கண்டித்து டைரக்டர் துரையவர்கள் விடுத்த ஆர். ஓ. மி. நெ. 152 ஏ 2 (1-11-33) உத்தரவின் பிரகாரம் பாடசாலைகளை ஒன்றோடொன்று சேர்க்கப்படுமானால் தங்கள் ஜில்லாவில் மாப்பிள்ளை வகுப்பார் கல்வி அடியோடு தொலைந்துவிடுமென்பதாகவும் அவ்விதம் பாடசாலைகளை சேர்ப்பதாயிருந்தால் முஸ்லிம் பாடசாலைகளை விடுத்து இதர பாடசாலைகளை சேர்த்துக் கொள்ளலாமென்பதாக தீர்மானித்தார்.

## ஆரம்பாசிரியர்கள் சங்கம் தென்காசி.

டை சங்கக் கூட்டம் (2-12-33)ல் பொன்னம்பலம் வித்தியாசாலையில் வைத்து நடைபெற்றது. அதில் நடந்த முக்கிய விஷயங்கள்.

தலைமை வகித்தது ஸ்ரீமான் டி. சுப்பிரமணிய உபாத்தியாயர்,

கடந்த இரண்டு மாதங்களில் நடந்த சமாசாரப் பத்திரிக்கையின் விஷயங்களின் குறிப்பை. ஸ்ரீமான் ரூசு சுப்பையா உபாத்தியாயர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அத்துடன் ஆரம்பக் கல்வி என்ற பத்திரிகையையும் காண்பித்து டை பத்திரிக்கையை ஒவ்வொருவரும் ஆதரித்து வாங்க வேண்டும் என்பதாய் எடுத்துச் சொல்லப்பட்டது.

இந்தியாவில் தேச தொண்டாக உழைத்து மிகவும் கீர்த்தி பெற்ற பெரியார் ஸ்ரீமான் வி. ஜெ. படேல் அவர்கள் இரண்டு மாதத்திற்கு முன் மண்ணுலகைவிட்டு விண்ணுலகை அடைந்ததற்காக இக்கூட்டம் அனுதாபம் காட்டவேண்டுமென்று ஸ்ரீமான் எம். அப்துல் லலாம் அவர்களால் தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஸ்ரீமான் ரூசு சுப்பையா உபாத்தியாயர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் எல்லாரும் எழுந்திருந்து நிறைவேற்றப்பட்டது.

பாடசாலையின் வெகுமதியும் தண்டனையும் என்ற விஷயத்தை ஸ்ரீமான் எச். ஏ. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் விரிவாய் எடுத்துச் சொல்லப்பட்டது தலைவர் அவர்கள் முடிவுரையில் வைத்துமலையில் நடந்த பொருட்காட்சியைப்பற்றி தெரிவித்த பிற்பாடு, வந்தனோபசாரம் கூறி கூட்டம் இனிது நிறைவேறிற்று.

காரியதரிசி:—சி. சுப்பையா பிள்ளை

# செம்பியன் ஸ்கீம்

ஜி. ஓ. நெ. 1639 லா, எடுகேஷன் (9-9-33)

தற்போது நமது ஆரம்பக் கல்வி உலகில் பாடசாலைகளை இணைக்கப்பட்டு சுருங்கின செலவில் திறமையாக மத்திய பாடசாலைகளை நியமித்தும், சில பாடசாலைகளை சுருக்கியும், பெருக்கியும், நடத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்கனவே கண்டித் தெரியப்பட்ட செம்பியன் ஸ்கீம் மறுபடியும் புத்துயிர் பெற்று தலைகாட்டியிருக்கின்றது இதற்காக எல்லா ஜில்லாக்களிலும் கல்வி அதிகாரிகள் ஒரு திட்டத்தை டைரக்டர் துரையவர்கள் உத்திரவின்படி தயாரித்து வருகிறதாகவும் தெரிகிறது. இதற்குள் இந்த திட்டத்திற்கு முகம்மதியர்கள் ஒரு புறமும், கிரிஸ்தவர்கள் ஒரு புறமும் இந்த திட்டத்தில் தங்கள் பாடசாலைகளை சேர்க்கவே கூடாதென பல கண்டனக் கூட்டங்களும் கூட்டி கண்டித்துவர ஆரம்பித்துவிட்டனர். இன்னும் நாட்கள் ஏற இந்த ஸ்கீம் என்ன கதியாகிறதோ தெரியவில்லை. இந்த ஸ்கீம் அநேகருக்கு சரியாக விளங்கவில்லையென்பதில் ஆச்சரியமில்லை. செம்பியன் துரையவர்கள் ஸ்கீம் ஏட்டளவில் சரியாய் இருக்கின்றதே யொழிய காரியத்தில் நடத்த இயலாது போல் தோன்றுகிறது. தற்போது நாம் இந்த ஸ்கீமிலுள்ள சில முக்கிய அம்சங்களை சுருக்கமாக வெளியிடுகின்றோம்.

நோக்கம் தற்போது ஆரம்பக்கல்விக்காக செலவாகும் பணம் குறைவுபட வேண்டும், பாடசாலைகளும் திறமையாக நடைபெற வேண்டும். திறமையென்றால் என்ன? போதுமான கல்வியில்லாத ஆசிரியர்களை நீண்ட காலம் வைத்துக்கொள்ளுதல் கூடாது. ஒரு ஆசிரியர் 2-வகுப்புகளில் போதிக்கக்கூடாது. பென்சி, நாற்காலி, போர்ட் முதலியவைகளை சரியாக இருக்க வேண்டும். சுருக்கமென்றால் என்ன? மிக குறைந்த பிள்ளைகளுடைய வகுப்புக்கள் உள்ள சிறு பாடசாலைகள் அதிகம் இருப்பதால் ஒரு உபாத்தியாயர் 30 பிள்ளைகள் வரையில் போதிக்க ,சாத்திய மாகாததால் அதிக பண நஷ்டம், ஆதலின் ஒரு உபாத்தியாயர் ஏறக்குறைய 30 பிள்ளைகளுக்கு போதிக்கும்படியாக வகுப்புக்களை இணைக்கப்படவேண்டும்.

2. இம் மாகாணத்தில் ஆண்பிள்ளைகளுடன் பெண்பிள்ளைகளும் கலந்து வாசிப்பது 3-வது வகுப்பு வரையில் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து வாசிக்கலாம் மிகவும் சகஜமானதால், பெண்களுக்கென தனிமையான பாடசாலைகள் வேண்டியதில்லை அத்தகைய பாடசாலைகளில் ஆண்களையும் கலந்து வாசிக்கச் செய்யலாம் இல்லை

யேல் அப் பெண்பிள்ளைகளை ஆண் பாடசாலைகளில் சேர்த்துவிடலாம் 8-வது வகுப்பு 5-வது வகுப்புவரையிலுள்ள பெண் பாடசாலைகளில் ஏறக்குறைய 30 பிள்ளைகள் இருக்குமானால் அப்பாடசாலைகளை இந்த இணைக்கும் திட்டத்தில் சேர்க்கவேண்டியதில்லை

3. பொதுப் பாடசாலைகளில் பெண் பிள்ளைகள் அதிக மிருப்பின் அதில் உபாத்தியாயினிகளை அமர்த்தி பின்னல் பாட்டு முதலியவைகளை கற்பிக்கும்படி டிப்டி இன்ஸ் பெக்டர்கள் ஏற்பாடு செய்வது நலம்.

4. எவ்விடத்திலாவது பெண் பாடசாலைகளை ஆண் பாடசாலைகளுடன் இணைக்க பொதுஜன தாய் தந்தையர் அபிப்பிராயம் எதிர்த்திருப்பின் அத்தகைய பெண் பாடசாலைகளை தற்சமயம் விட்டு நாளடைவில் பெண்பிள்ளைகளை ஆண்பாடசாலைகளில் சேர்க்க தாய் தந்தையர்களுக்கு பிரசாரம் செய்ய வேண்டியது.

5. (ஸெண்டிரல் ஸ்கூல்) மத்திய பாடசாலை ஏற்படுத்தவேண்டுமானால், போதுமான இடவசதி ஒரே கட்டிடத்தில் அகப்படுவது துல்லபம், ஆதலின் அடுத்தபடியிலுள்ள கட்டிடத்திலும் சில வகுப்புக்களை மாற்றிக் கொள்ளலாம். எல்லா வகுப்புக்களும் ஒரே கட்டிடத்தில் இருக்கவேண்டு மென்பது அனாவசியம்.

(தொடரும்)

---

## ஆரம்பாசிரிய சங்கக் காரிய தரிசிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

கூடுமானவரையில் நமது பத்திரிகைகளை அடுத்த ஆசிரியர் சங்கங்களுக்கு மாதிரிப் பிரதியாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்விதம் இயலா விடின் தங்கள் ரேஞ்சிலுள்ள இதர ஆசிரியர் சங்கங்களின் விலாசங்களை சற்று சிரமம் பாராது குறித்து அனுப்பிவிடின். சென்னையி லிருந்தே மாதிரிப் பிரதிகளை அனுப்பி வைக்கின்றோம். கூடுமானவரையில் காரியதரிசிகள் சங்க நடவடிக்கைகளை கூடுமான வரையில் சுருக்கி எழுதி யனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். இது வரையில் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை ஆதரித்தது மல்லாமல் இப்பத்திரிகையின் அபிவிருத்திக்காக உழைக்க முன்வந்திருக்கும் ஆரம்பாசிரிய சகோதர சகோதரிகளுக்கு எமது மனமார்ந்த வந்தனத்தை யளிக்கின்றோம்.

பத்திராதிபர்.

# சங்கக் குறிப்புகள்

---

## சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் நிர்வாகக் கூட்டம்

(31-12-33)

ஷை நிர்வாகக் கூட்டமொன்று மாலை 4-மணிக்கு சென்னை, தம்பு செட்டித் தெரு, நெ 250:வது இல்லத்தில் திரு வி. டி அரசு எம். எல். ஸி. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. சுருக்கமான பணத்தில் திறமையாக ஆரம்பக் கல்வியை பிள்ளைகளுக்கு போதிக்கும் விஷயத்தில் அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை இச் சங்கம் வரவேற்பதோடு ஜி. ஓ. நெ. 1639. லா எடுகேஷன் (9-8-33) குறிப்பிட்டப்படி பாடசாலைகளை இணைக்கப்படும் ஸ்கீமை இராஜதானி முழுதும் ஏக காலத்தில் அமுலுக்குக் கொண்டு வரும் முன்னம் அதை இரண்டொரு தாலூக்காவில் பாடசாலைகளை இணைத்து பரிட்சை செய்து, அதிலுள்ள நன்மை தீமைகளை நன்றாக சீர் தூக்கிப் பார்த்த பிறகு தான் மாகாண முழுதும் பிறகு அமுலுக்கு கொண்டுவர வேண்டு மென்பது.

அவ்விதம் பரிசீலனை செய்ய, ஜில்லாக் கல்வி அதிகாரி, டிப்டி இன்ஸ் பெக்டர், தாலூக்கா போர்ட்டு மெம்பர்களிலிருந்து ஒருவர், மிஷன் பாடசாலை மானேஜர் ஒருவர், ஆசிரிய மானேஜர் ஒருவர், பாடசாலைப் பிள்ளைகளின் தாய் தந்தையர்களில் ஒருவர் ஆக கலந்த கமிட்டி யொன்றை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டு மென்பது.

முதலில் மத்திய பாடசாலைகளை (ஸெண்டிரல் ஸ்கூல்) ஏற்படுத்தும் இடங்களைக் குறிக்கவேண்டும், குறித்த பிறகு ஒரு அளவுள்ள சுற்றுப்பக்கங்களிலுள்ள பாடசாலைகளையும், பிள்ளைகளையும் கணக்கிட்டு பிள்ளைகள் அதிகமாயிருந்து பாடசாலைகள் போதுமானதாயிராவிடில் புதுமையான பாடசாலைகளை ஏற்படுத்த பிரயத்தனப்படவேண்டும். பாடசாலைகள் அதிகமிருந்து பிள்ளைகள் குறைந்திருக்கும் பாடசாலைகளை அழித்து விடாமல் எந்த வகுப்புக்களை இணைக்கப்படவேண்டுமோ, அவைகளை யோசித்து இணைக்க தீர்மானிக்கவேண்டும், அவ்விதம் இணைக்கப்படுங் காலங்களில் முதலில் போர்ட் பாடசாலைகளை போர்ட் பாடசாலைகளிலும் எய்டட் பாட

சாலைகளை எய்டட் பாடசாலைகளுடனும் சேர்க்க முயல வேண்டும் அவ்விதம் இயலாவிடின் போர்ட் பாடசாலை வகுப்புக்களை எய்டட் பாடசாலைகளில் சேர்க்க முயல வேண்டும், எப்பொழுதும் மத்திய பாடசாலை (ஸெண்டிரல் ஸ்கூல்) ஏற்படுத்த எய்டட் மானேஜ்மெண்டு களுக்கே. முதலில் இடம் கொடுக்க வேண்டும்.

2. 7-11-33-ல் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களுக்கு கிராண்டைக் கொடுக்கக் கூடாதென யோசித்துக் கொண்டிருக்கும் சட்ட சீர் திருத்தத்தை கவர்ன்மென்டார் அமுலுக்கு கொண்டுவரக் கூடாதென்பது.

3. அரசாங்கத்தார் அவ்வப்பொழுது வெளியிடும், அறிக்கைகளையும், உத்திரவுகளையும், சென்னை மாகாணத்திலுள்ள ஆசிரிய மானேஜர் சங்கங்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது.

4. ஆசிரிய மானேஜர்களுக்கு அந்தந்த ஜில்லாக் கல்விச் சபைகளில் அவர்கள் பாடசாலைகளின் எண்ணிக்கையின் பிரகாரம் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டு மென்பது.

5. போதனா பயிற்சியில் தேர்ந்த உபாத்தியாயர்களை வைத்து பாடசாலைகளை திறமையுடன் நடத்துவதன் நிமித்தம் தற்போதுள்ள குறைந்துள்ள ஸ்கேல் கிராண்டை உயர்த்திக் கொடுக்கவேண்டு மென்பது.

6. தென்னூர்க் காட்டில் ஆசிரிய மானேஜர்கள் சார்பாக ஜில்லாக் கல்விச் சபைக்கு தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளை இன்னும் அரசாங்கத்தார் கெஜெட்டில் வெளியிடாமலிருப்பதைப்பற்றி இச்சங்கம் மிகவும் வருந்துகின்றது. இது விஷயமாக ஜில்லாக் கல்விச் சபை தலைவரையும், ஜில்லாக் கல்வி அதிகாரியையும் இது விஷயத்தில் சீக்கிரம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகின்றது.

## கோவில் பட்டி ரேஞ்சு. ஆசிரிய மானேஜர் சங்கம்

1933௵ டிசம்பர்௴ 2௳ மாலை 1-மணிக்கு கோவில்பட்டி கஸ்பா ஆயிர வைசிய தர்ம வித்யா சாலையில் ஷை ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ம-௱-௱-ஸ்ரீ சிவராம கிருஷ்ணய்யர் பி. ஏ. எல். டி. அவர்களது அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது.

1. ஒவ்வொரு பள்ளிக்கூடங்களுக்கும் கல்வி இலாகா பரீக்ஷா அதிகாரிகள் சிபார்சு செய்தபடி திரவிய சகாயம் செய்யும்படி கல்வி சபையாரைக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.



2. கல்வி யிலாகா உத்திரவுப்படி 12-1-32ல் வேலை பார்த்த யாதொரு சர்ட்பிகேட்டு மில்லாத ஆசிரியர்களுக்கு அப்பொழுது வேலை பார்த்ததின் அடையாளமாக "சர்வீஸ்" சர்ட்டிபிகேட் கொடுக்கும்படி கல்வி. இலாகா கனம் டைரக்டர் அவர்களையும் கனம் கல்வி மந்திரியவர்களையும் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

3. கல்வி சபையில் தற்சமயம் ஆசிரிய மானேஜர்களுக்கு இரண்டு ஸ்தானம் கிடைத்திருப்பது. மிகவும் குறைவாக இருப்பதால் ஒவ்வொரு ரேஞ்சிற்கும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் ஜில்லா கல்வி சபையில் ஸ்தானம் கொடுக்கும்படி கல்வி இலாகா கனம் கல்வி மந்திரியவர்களையும் கனம் டைரக்டர் அவர்களையும் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

காரியதரிசி:—சிவானந்த சர்மா.

## ஆசிரிய மானேஜர்கள் சங்கம் பொள்ளாச்சி.

21-12-33 ஷை ரேஞ்சு பாடசாலைகளின் ம-௱-௱-ஸ்ரீ, கனம் டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் மேல் மாடியில் சங்கம் கூடப்பெற்றது ஷை சங்கத்திற்கு ஷை இன்ஸ் பெக்டரவர்களையே அக்கிராசனம் வகுக்குமாறு மெம்பர்கள் வேண்டிக் கொள்ள அவர்களும் அக்கிராசனம் வகித்தார்! அன்னார் தலைமையின் கீழ் சங்கம் துவக்கப்பட்டு. கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. பொள்ளாச்சி ரேஞ்சு பாடசாலைகளின் கனம் டிப்டி இன்ஸ்பெக்டரவர்களும் தற்போது இன்று அதாவது 21-12-33 தேதி சங்கத்திற்கு தலைவர்களுமான அன்னாரையே அடுத்த சங்கத்திற்கு 1934௵ ஜனவரி மாதம் 3 வாரம் வியாழக்கிழமை யன்று கூடும் சங்கத்திற்கு தலைமை வகிக்குமாறும் ஷை சங்கத்திற்கு மெம்பர்கள் குறைவாய் இருப்பது பற்றியும் சங்க முன்னேற்ற மடைய வேண்டிய வழியையும் அதனால் உண்டாகும் நன்மையையும் போதிக்குமாறு இச்சங்கம் வணக்கத்துடன் நேரில் கேட்டுக் கொள்ள அவர்களும் அவ்விதமே செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அதன்படி எல்லா மெம்பர்களுக்கும் சர்க்குலா நோட்டீஸ் மூலம் தெரியப்படுத்திவர வழைக்க வேண்டு மாய்த் தீர்மானிக்கப்பட்டது.

2. சென்னை ஆசிரிய மானேசர்களின் சங்கம் வெகுவிமரிசையாக நடைபெற்று வருவதோடு நம் சகோதர ஆசிரிய மானேஜர்கள்,

கம், பொது நல முன்னேற்றத்திற்கு உழைத்துவருவதாக ம-ா-ா-ஸ்ரீ டிப்டி இன்ஸ் பெக்டரவர்கள் மூலமாய் தெரியவருவதால் அவர்களில் சிலமெம்பர்கள் இங்கு விஜயம் செய்து நம்மவர்களுக்கு தகுந்த வழியும், அறிவும் ஊட்டுமாறு அச்சங்கம் காரியதரிசியை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. ஆரம்பக் கல்வி பத்திராதிபரும் நம் சகோதர ஆசிரிய மானேஜருமான ஸ்ரீமான் பி. வீரராகவன் அவர்கள், கனம் தலைவரவர்களுக்கு அனுப்பிய [ரேஞ்சு இன்ஸ்பெக்டருக்கு] பத்திரிக்கையை அவர்களால் நமது சங்கத்தித்தில் கொடுக்க அதை வாசித்து எல்லா மெம்பர்களும் ஆனந்தித்ததோடு நமது சங்கத்திற்கும் ஓர் பத்திரிக்கை வரவழைக்கலா மென்று தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 4:-ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும் பல, மானேஜர்களுக்குள் ஒற்றுமை வேற்றுமை இருந்து வருவதால், அதை நீக்கி ஆரம்பக் கல்வி, அபிவிருத்தியின் முன்னேற்றத்தைக் கருதி எல்லா மானேஜர்களுடைய சங்க மொன்று கோவையில் கூட்ட வேண்டுமென்று கோவை ஜில்லா ஆசிரிய மானேஜர்களின் சங்கத்தையும் மாகாண சங்கத்தையும் இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

5. அவ்வப்பொழுது கவர்மெண்டாரால் பிரசுரிக்கப்படும் உத்திரவுக்கு நகல் இச்சங்கத்திற்கு அனுப்பவேண்டுமாக இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

6. கனம் டிப்டி இன்ஸ் பெக்டரவர்கள் உபதேசம் செய்தபடி திரவிய சகாய பாடசாலைகளில் ஒரே விதமான புஸ்தகங்களை வாங்கி ஷை பாடசாலைகளில் உபயோகித்து வரவேண்டுமெனவும் அவ்வாறு உபயோகிப்பதில் கிடைக்கக் கூடிய ஆதாயத்தில் ஒரு பகுதியை இச் சங்கத்திற்கு சேர்த்தால் மூலதனம் ஏற்படுமெனவும் தீர்மானிக்கப் பட்டு அவ்விஷயம் அடுத்த மீட்டிங்கியில் ஆலோசித்து முடிவு செய்யலா மெனவும் தீர்மானிக்கப்பட்டது.

காரியதரிசி:—என். பழனியப்ப முதலியார்.



## நஞ்சை தலையூர் ஆரம்பாசிரியர் சங்கம்.

16-12-33 பிற்பகல் 2-மணிக்கு இச்சங்கத்தின் இம்மாதத்திய கூட்டத்தை சென்ற மீட்டிங்கில் தீர்மானித்தபடி அருகிலுள்ள கந்தசாமி பாளையம் போர்டு பாடசாலையில் இச்சங்கக் காரியதரிசியவர்களின் தலைமையில் கூடிற்று.

அங்கத்தினர்கள் அனைவரும் வந்திருந்ததுடன் அக்கிராம ஜனங்களின் சிலரும் விஜயம் செய்திருந்தனர். வழக்கப்படி சங்க விஷயங்கள் நடத்தப்பட்டதுடன். ஷை பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் எ. சிவசுப்ரமண்யர் அவர்களால் ஆபத்தில் முதல் உதவி என்பது பற்றி அரியதோர் சொற்பொழிவும் நிகழ்த்தியதுடன் செண்டர் சங்கங்களை இதுபோல் அருகிலுள்ள ஊர்களில் நடத்துவதுடன் அன்று பெற்றோர் சங்கக் கூட்டத்தையும் நடத்திடில் தக்கபலன் ஏற்படக் கூடுமென்றும் இது விஷயங்களில் எல்லா ஆசிரியர்களும் ஒத்துழைத்து ஊக்கமளிக்கவேண்டு மென்றும் பேசி முடித்தார்.

பின்பு தலைவர் அவர்கள் இன்று மீட்டிங் மிகவும் சிறப்பாக நடந்திருக்கிறதென்றும் இதுபோன்ற நாட்களில் நல்லறிஞர்களைக் கொண்டு தலைமை வகிக்கச் செய்யின் இன்னும் விசேஷமாயிருக்குமென்றும் இவற்றிற் கெல்லாம் ஆசிரியர்களின் ஊக்கமும் ஒற்றுமைப்புமே அவசியமான தென்றும் இனியேனும் ஆசிரியர்கள் தமது எளிமையையும் வறுமையையும் சிந்தித்துக் கொண்டே இராமல் கால மாறுபாட்டிற் கேற்ப, பத்திரிகை, புத்தகாலயம், முதலிய உலகியல் விஷயங்களில் நம்பிக்கை கொண்டு முன்னணியில் நின்றுழைத்து வந்தால் முயற்சி திருவினையாக்கும் என்பதற்கொப்ப இறைவனருளால் யாவும் கைகூடு மென்றும் முடிவுரை கூறினார்.

உதவி காரியதரிசி:—பி. ஆர். ராம ஐயர்.

## போளூர் ஆரம்பாசிரியர் சங்கம் கடலாடி.

போளூர் ரேஞ்சு கடலாடி செண்டரில், போர்டு ஆண்பாடசாலை கட்டிடத்தில், 16-12-33ல் சங்க சாதாரணக்கூட்டம் ஸெக்ரெட்டரி அக்கிராசனத்தின் கீழ் காலை 9-மணிக்கு கூடிற்று.

தேர்தல் விவரம்:—இச் சங்கத்திற்கு,

பிரஸிடெண்ட்:—போளூர் ரேஞ்சு ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்களையும்,

வைஸ் பிரஸிடெண்ட்:—ஷை ரேஞ்சு ஜூனியர் டிப்டி இன்ஸ் பெக்டர் அவர்களையும்;

காரியதரிசி:—சங்கம் கூடும் பாடசாலை தலைமை ஆசிரியரையும்,

உதவி காரியதரிசி:—கடலாடி போர்டு ஆண் பாடசாலை உதவி ஆசிரியர் என். கிருஷ்ணசாமிப் பிள்ளை அவர்களையும்,

நிர்வாக கமிட்டி மெம்பர்கள்:—

| | | | | |
|---|---|---|---|---|
| போர்டு | பாடசாலை | ஆசிரியர்களில் | 3 | நபரையும் |
| பஞ்சாயத்து | ,, | ,, | 1 | ,, |
| எய்டெட் | ,, | ,, | 1 | ,, |

மேல் கண்டவர்களை சங்கம் ஏகோபித்து தேர்ந்தெடுக்கப்பட்டது.

இனி 1944-ம் வருஷம் ஜனவரி மீ முதல் பகல் 12-மணி முதல் 2 மணி வரையில் சங்கம் கூடி முடிக்க தீர்மானிக்கப்பட்டது.

"ஆரம்பக் கல்வி" என்னும் பத்திரிகை ஒன்று இதற்கடுத்த காஞ்சி செண்டருக்கு அனுப்பப்பட்டது.

ஒவ்வொரு ஆசிரியரும் ஆரம்பக் கல்வி சந்தாதாரராகி, விஷய தானம் செய்ய வல்லுனராக வேண்டுமென இச்சங்கம் மிகவும் அழுத்தமாக தீர்மானிக்கப்பட்டு பகல் 11-மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

காரியதரிசி:—வசுந்திர நைனர்

# பதில் உண்டோ?

(சௌமியன் - சென்னை)

---

மந்த மாருதம் அந்தமாக வீசும் சந்திப் போதில், சென்னை கடற்கரை வழக்கப்போல ரமணீயமான காட்சியுடன் விளங்கிற்று. சிங்கார மிக்க வனிதைகள், செல்வச் சீமான்கள், உற்சாகமே உருவெனத்தகும் உல்லாசயுவர்கள், விதவிதமான மோடார் விசித்திரமான பல்வேறு சீன்கள், எங்கு பார்ப்பினும் ஆனந்த அமளி. எங்கு நோக்கினும் சந்தோஷம். பூலோக இந்திரதர்பார் என்று சுருங்கக் கூறுவதும் ஒக்கும். இத்தகைய நாடு ஏழை நாடாம், வெறும் மனப் பிராந்தி, அதோ தெரியும் மோட்டாரின் விலை 7850 ரூபாய், அதில் உள்ள வசீகரக்கைம் பெண்ணின் உடைச் செலவு மட்டும், மாதம் 500 ரூபாய். அவள் கைக் கடியாரத்தின் விலை 650. அவளுடன் செல்வத்தில் போட்டிபோடும் பல பெண்டிரும், ஆடவரும், பேடிகளும் உண்டு. இத்தகைய நாட்டை தரித்திர நாராயணன் தாண்டவமாடும் நாடெனக் கூறல் பொருந்துமோ? பொருத்தமற்ற புளுகு!

கால் வயிற்றுச் சோற்றுக்குத் தாளம் போடும் கந்தன்! பரிவுடன் பெற்றெடுத்த மக்களைப் பசிப்பேய் வாட்ட, அவர்தம் வாட்டத்தை நீக்க வழியின்றி வதையும் வீரன், கொண்ட பெண்டின் மானத்தைக் காக்க சீலைவாங்க இயலாது படைத்த அயனை நொந்து கொள்ளும் பொன்னன், அரை டஜன் மக்கள் தன்னைச் சுற்றி கோர நடனமிட, அதுகண்டு மனம் பொறுது, பாழுங் கிணற்றில் விழலாமா அல்லது தூக்கிட்டுக் கொள்ளலாமா என்று யோசிக்கும், குருட்டுக் கிழவி காலையில். சேவலுடன் எழுந்து, நெற்றி வியர்வை நிலமீது சொட்ட, உழைத்து உழைத்து, மனிதனா, எலும்புக் கூடா? என்று கண்டோர் சந்தேகப்படக்கூடிய நிலையிலுள்ள தொழிலாளி, பால் வேண்டி தாயின் மார்பைத் தன் பற்களற்றவாயால் பற்றிப் பற்றிப் பன்முறை இழுத்தும் பால்வரப் பெறுது, பரிதாபத்துடன் தாய் முக நோக்கி அழும் குழவியும், பாழும் தெய்வமே" என்று பல்லவி பாடும் தாயும், அன்றையக் கூலி

யில் அரை பாகத்தை கள்ளுக்கு கொடுத்துவிட்டு, தாயையும் அவள் தன் குழவியையும், தடுமாற்றத்துடன் பார்க்கும் ஏழைக் குடியன்! இதுவும் இந்தியா தான். இதுவும் பண்டைக் காலத்தில் பண்புடன் பொலிந்த பாரத நன்னாடுதான். இத்தகைய நாட்டை செல்வமுள்ள நாடு, பணக்காரத் தேசம் என்று யார் கூசாது கூற முன்வர இயலும்.

உண்மைதான் என்ன? இந்தியா ஏழ்மையான நாடா? அல்லது செல்வ மிக்க தேசமா? நம் மெல்லோரையும் பசிப்பிணியினின்றும் விடுவிக்கும் ஆற்றல் கொண்ட தேசமா? அல்லது, “வருகுவது வந்தே தீரும்” என்ற போதனையை மட்டுமே புகுத்தி, தரித்திர தாசர்களாக நம்மை மாற்றும், தேசமா? இங்கு பிறந்த நமக்கு, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்கக் குடியும் உண்டா இல்லையா? நமது பிறப்புரிமையாகிய நல்வாழ்க்கையை நமக்குத் தரத் தக்க பூமியா, அல்லது, காடுகளில் ஓடித்திரியும் விலங்கினத்திலும் கேவலமாக, உயிருக்கும் உடலுக்கும் சம்பந்தம், இருக்குமோ, என்ற பயங்கர சந்தேகத்தையே துணைகொண்டு தடுமாறித் தத்தளிக்கும் வாழ்வைத்தரக்கூடிய நாடா? விரிவஞ்சி சுருங்கக் கூறின், நாம் மனிதராக வாழ இது இடமா? அல்லது விலங்கினமாக வாழத்தக்க காடா? நாட்கள் செல்லச் செல்ல, மனிதர் மனதைக் குடையும் கேள்வி இதுதான்! ஆனால் இந்நிலை இங்குமட்டுமோ! குபேர நாடாகிய அமெரிக்கா எங்ஙனமுளது! நம் கொற்றவன் வதியும் சீமை எத்தன்மையது? பொதுவாக உலகம் எந்தப் பாகுபாட்டுடன் உள்ளது? எங்கும் இது பிரசன்னப்! இங்குள்ளது போல அவ்வளவு மோசமாக இராவிடினும், இங்கிருப்பதுபோல, பசி ஏப்பக்காரர் பலரிருக்க, புளி ஏப்பக்காரர் ஒரு சிலர் உளர்! ஏன்? இந்த விவரிக்க இயலாத விந்தையின் மர்மத்தை ஆராய்வது, அறிவுள்ளோர் கடன். கண்டவர் விண்டிடல் முறை, விண்டவர் கண்டனரா என ஆராய்தல் மிக அவசியம். சிலநாட்களுக்கு முன்பு ஜவஹர்லால் நேரு, “எங்கு போகிறாய் இந்தியாவே” என்ற தலைப்புடன் தம் சிந்தனைச் சிதைவுகளை கட்டுரை ரூபமாக வெளியிட்டார், படித்தவருள் பலர் மனங்கலங்கினர், ஒரு சிலர் ஓலமிட்டனர், பெரும்பான்மையினரின் உள்ளம் கொதித்தது, சிறுபான்மையினர் சீறினர், இவன் யார், சத்யாக்ரகப் போராட்டத்தை மறந்து சமத்துவ கீதம்பாட முன்வருவானேன்? என்று வினவினர்.

பண்டிதர் பாடி இராவிட்டாலும் பாடுவதை இன்றோ நாளையோ நிறுத்தி விட்டாலும், அக்கீதத்தை, தாள ராக பாவத்துடன் பல்லா



பிரக்கணக்கானவர் இனி பாடாமலிரார் என்பது திண்ணம். எரிமலை நெருப்பைக் கக்கினால், கந்தகக் குழம்பு உருண்டு புரளத்தான் புரளும். அஃதேபோல, மக்கள் மனதில் பல ஆண்டுகளாகச் சேர்ந்து, குழம்பி, கொதித்துக் கொண்டிருக்கும் எண்ணங்கள், ஒரு சமயத்தில் வெளிக்கிளம்பியே தீரும். யாரேனும் ஒருவர் முதலடியை எடுத்துக் கூறிவிட்டால், பக்கப்பாட்டு பாடுவது மனிதரியல். இயற்கைக் குணம். ஆதலால் பீதிகொண்டுள்ள பிரமுகர்கள், பண்டிதர் மீதுச் சீறுவதில் பயனில்லை. அவருக்கு வாய்ப் பூட்டு போட முயலுவதில் வெற்றிபெறார். ஏனெனில், எது இன்று உலகத்தவர் மனதில் குழம்பிக் கொண்டிருக்கிறதோ, எந்த பிரச்னையைத் தீர்க்க பல தேசத்து அறிவாளிகள் இன்று ஒன்று கூடியும், தனித்தனியேயும், யோசிக்கின்றனரோ, அதையே தான், வீரர் நேரு வெளிப்படையாகக் கூறினார். வரப்போகும் போரின், முரசுகொட்டினார் என்னலாம். இளைஞன் மனதில் பொதுவுடைமைக் கொள்கை புகுந்துவிட்டதுபோலும்’ என நேயர்கள் எண்ணிச் சீறக்கூடும். கட்டுரையைக் கிழித்தெறியலாமா? என்று கூட எண்ணுவர். ஆனால் யான் கூறவருவது பொதுவுடைமையன்று ரஷிய ஞானத்தைக் கூற முன்வந்தேனில்லை. தோட்டி வேலை செய்பவனுக்கு 6 அணா கூலியானால், தோடர் மால் வேலை செய்பவனுக்கும் அதே கூலி தான் தரல்வேண்டும் என்னும் தத்துவங்கொண்டேனில்லை. கூறுவது யாதெனில், இங்கு பிறந்த காரணத்தினால், மனிதன், சுகவாழ்க்கை, எனும் ஒரு பிறப்புரிமைப் பெறுகிறான். அந்தச் சுகவாழ்வு, போதிய உணவு, தகுந்த வீடு, மானத்தைத்தரும் உடை, கண்டதை தெளிவுபெற அறிய ஏதுவாக இருக்கும் கல்வி, முதலியவைகள் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஏன் பிறந்தோம் இந்நிலவுலகில் என்ற வெறுப்பு மனிதர் மனதினின்றும் மறைந்தொழிய வேண்டும். ஒவ்வொருவர் வசிக்கும் இடம், வீடாக விளங்குவதன்றி, காடாக விளங்கலாகாது. குழிவிழுந்த கன்னங்களும், ஒளி இழந்த கண்களும், எலும்புக்கூடுத் தேகமும் மறைந்து, வாழ்க்கை இன்பம் ஒவ்வொருவருக்கும் வரல்வேண்டும். அதோ ஒரு பிச்சைக்காரன், இதோ ஒரு ஏழை” என்ற கோஷ்டம் எழலாகாது; இங்குள்ளோர் யாவரும் மனிதர்கள், அவர்கள் யாவருக்கும் சுக வாழ்வு ஒரு இன்றியமையாத நிலை என்னும் வேதாந்தம் வீறி எழல்வேண்டும். ஒருவன் உடலினின்றும் வியர்வை நாற்றம் எழ எழ, அதன் துர்க்கந்தத்தை மாற்றுமுன்னம், மற்றொருவன்

தன் மேனியிலும் பரிமளத்தைலம் பூசி, அதன் வாசனையை நுகர்ந்து ஆனந்தக் கூத்தாடல் அடாது—இவைகளே யான் கூறுபவை.

இத்தன்மையான வாழ்வை மக்கள் பெற, முட்டுக்கட்டைகளாக நிற்பவை—எவையாயினும் சரியே - எந்தச் சமூகம் அதைத் தாங்கி நிற்பினும் சரி,—அவைகளை எதிர்த்துப் போராட வேண்டியது, வீர இந்தியர் கடமை.

"இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரு நாடு
கனியுங் கிழங்குந் தான்யங்களும்
கணக்கின்றி தரு நாடு—இது
கணக்கின்றி தரும்நாடு - நித்தநித்தம்
கணக்கின்றித் தரு நாடு"

என்று பாரதியார் பாடியுள்ளார். அத்தகைய வாழ்க்கைத்குத் தேவையான பண்டங்களுக்கும், பசிநோயால் வாடும் மக்களுக்கும் இடையே வழிமறித்து நிற்பது எதுவாக இருப்பினும் - அதை முதலாளித்வம், செல்வந்தர்கள் சூது,—எதுவெனக் கூறினும் கூறுக, அதை நீக்க முயல்வது அறிவுள்ளோர் செய்யவேண்டிய பணி.

உலகிலே ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகப்போகிறது. இடையே இன்னல்கள் பல எழல் இயல்பு. ஆனால் சளைக்காது உழைக்கும் தீவிர ஞானத்தை ஊட்டுபவர், ஆரம்பக் கல்வி போதகாசிரியர் என்பது மிகையாகாது!

"மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினி யுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கையினி யுண்டோ"—என்ற

கேள்விகளை எழுப்பி, காரணத்தைக் கூறி, புதிய சகாப்தத்திற்கு யுவர்களைத் தயார் செய்ய வேண்டியவர், ஆரம்பக் கல்வி போதகாசிரியர்களே யாகும்! — "அவர் (ஏழைகள்) விம்மி விம்மி விம்மி, விம்மி யழுங்குரல்" கேட்டுள்ள ஆசிரியர், இத்தொண்டாற்ற முன் வருவார்களா? அன்றி

"பெட்டைக் கோழிமுட்டை இடும்"
இராமன் வீட்டுச் சேவல் இதுதான்"

என்ற பழய பாடத்தை மட்டுமே போதிக்க இசைவரா? என்று இளைஞர் கூட்டம், கேட்கிறது. புதிய இந்தியா அவர்தம் பதிலை எதிர்பார்த்து நிற்கிறது.

# உதய குமாரன்

## (வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்)

## ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன்தொடர்ச்சி)

### சுயம்வர மண்டபம்:

மன்னர் யாவரும் சுயம்வரமண்டபம் வந்திருத்தல். சயிந்தை தன் தோழிமார்களுடன் மணிமண்டபத்திற்கு மணமாலை கரத்தேந்தி வருதல். அரசர்கள் யாவரும் வீணை வாசித்தல். மாலை எவர்க்கும் விழுந்திலது.

சீவோதயன்:—அரசர்கரசே! அறிவிற் சிறியேனும், நும்மிற் கடையேனுமாய் எளியேன் ஒருவன் இவண் வந்துற்றேன். யான் வீணையில் வல்லேன். உத்தரவளிக்கின் வாசிக்கின்றேன்.

வீரகேசரி:—அரசர்காள்! இக்காளையைக் காணின் ஒரு அரசிளங் குமாரனைத் தோற்றுகின்றது. நும்போன்ற மன்னரால் வாசிக்க வியலாதபோது இவனோ வாசிப்பன். பார்ப்போம். (சீவோதயனைப்பார்த்து) அப்ப! நீ வாசிக்கவல்லனல்லையேல் கொலைக்காளாகச் சம்மதமோ.

சீவோதயன்:—தங்கள் கட்டளைப் படிக்கே.

வீரகேசரி:—அப்படியாயின் நீ விரும்பியபடியே வீணை வாசிப்பாய்.

சீவோதயன்:—வாசித்தல். யாவரும் மெச்சுதல். சயிந்தை மாலை சூட்டுதல்.

துஷ்டத்:—மிகவும் (வெகுண்டு) என்ன இவன் என் நாட்டுச் செட்டி மகனோ இவண் இவ்வளவு சாமர்த்தியனோ. யாவராலும் இயலாதது இவனால் இயலுமோ வென்றல்லவோ இருந்தேன். நல்ல திருக்கட்டும். மன்னர்மகளைத் தம்மொளொத்த மன்னர் மணப்பதல்லாது வணிகர் மணப்பதில்லை. வணிகர் வனிதையளை மன்னர் மணப்பதியல்பு. நம் மங்கை அச் செட்டி மகனுக்குச் கொடுப்பது நமக்கவமானமன்றோ. ஆனதுபற்றி நம் முள் ஒருவரே இத்திருவைப் பெறுதல்வேண்டும். இவனை இவ்விடமே கொன்று நம் அவமானத்தைத் தீர்ப்பம்.

நீதிபூபன்:—துஷ்டத் தும்மரே! நாம் யாரும் ஒன்று சேர்ந்து ஒருவனைக்கொல்வது எளிதினும் எளிது. மேலும் நிராயுதபாணி

யான ஒருவனைக் கொல்வது அதனினும் எளிது. நாம் யாவரும் சேர்ந்து அவனைக் கொன்று விடின் மணமகளைக் கைப்பற்றுவது யாவர். பின்னர் நம் முன் கலக்கம் நேர்ந்து நம்மை நாமே கொன்று மடிதல் வேண்டிவரும். மன்னன் மகளைச் சாமான்யனொருவன் கொள்ளத்தகாததே. ஆனதால் எனக்குத் தெரிந்ததென்னவெனின் சயிந்தையை மணக்க விரும்புவார் எவரோ அவரவர் தனித் தனி அவனிடம் போர்புரிந்து எவன் முடிவில் ஜெயித்து நிற்கின்றானோ அவனே சயிந்தையைப் பெறுவன்.

வீரகேசரி:—நீதிபூபர் கூறியதே மிகவும் சரி. இவ்விடம் வந்துற்ற மன்னர் தம்முன் எவர் இக்காளை தன்னை வெற்றிகொள்கின்றனரோ அவரே என்மகள் சயிந்தையை வரிப்பர்.

ஒவ்வொருவராய்ப் போர் செய்து தோல்வியடைதல். துஷ்டத்தும்மனும் மற்றவர்களும் போய்விடுதல். சீவோதயன் சயிந்தையை மணந்து இன்புற்றிருத்தல்.

அரசர் வீதி

சீவோதயன் தன் நண்பன் பதுமுகனோடு வேட்டைக்குச் சென்று கொண்டிருக்கும் அவ்வழியில் அசனிவேகம் என்னும் பட்டத்துயானை எதிர்த்து வழிமறுத்தலும் சீவோதயன் ஓர் அம்பெய்து அதன் துதிக்கையைத் துணித்து அப்புறஞ் செல்லல்.

துஷ்டத்தும்மன் சபை.

துஷ்டத்:—குணாகர! வைரமணிச் செட்டி குமாரன் சீவோதயன் மிகவும் பொல்லாதவனாய் இருக்கின்றான். சற்றேனும் அச்சமின்றி அரசர் செறிதருங் குழாத்துள் தானும் ஒருவனாக கலந்திருந்து. யாழ் பயின்று வீரகேசரிவர்மன் திருமகளை மற்ற மன்னர் வெட்கித் தலைகுனிய மணந்து, மிக்க இருமாப்பெய்தி நம் நாட்டிலேயே வாழ்ந்து வருகின்றான். நம் குடிகளின் நல்லெண்ணத்தைப் பெற்று அவர்கட்கோர் கண்போல் திரிந்து வருகின்றான். அவன் இன்னும் சிறிது காலம் உயிருடனிருந்தால் எப்படியும் நமக்குக் கேடு நேரும் என நினைக்கின்றேன். எவ்விதத்திலாயினும் ஒரு விதத்தில் அவர்களைத் தலைத்துவிடல் வேண்டும்.

மாவுத்தன்:—(அழுது புலம்பிக் கொண்டே சபையில் வந்து விழுந்து அதிகமாக அழுதல்.)



துஷ்டத்:—மாவுத்த! என்ன செய்தி? ஏன் அழுகிறாய்? காரணமென்ன? உடனே சொல்வாய்.

மாவுத்தன்:—அரசர் அரசே! நம் பட்டத்து வேழம் நம் வீதிவழியாய்ச் சென்று கொண்டிருத்தலும் வைரமணிச் செட்டியார் குமாரர் சீவோதயன் வேழம் வழிமறுத்ததென்று ஓர் அம்பெய்தி அதன் துதிக்கையைத் துணித்துச் சற்றும் அச்சமின்றித் தன் வழிச் சென்றார். இதுவே நடந்ததைய.

துஷ்டத்:—[மிகவும் வெகுண்டு] என்ன எவ்வளவு அலக்ஷியம். என்ன தீரம். நம்மையும் ஓர் மன்னனென்று பொருட்படுத்திலன். நல்லதிருக்கட்டும். எப்படியும் அவனை இன்றேகொன்று எமபுரம் அனுப்பிவைக்கின்றேன். யாரடா சேவகா.

சேவகன்:—தேவரீர் கட்டளைக்கு எதிர்பார்த்து நிற்கின்றேன்.

துஷ்டத்:—சீக்கிரம் சென்று என் மைத்துனன் மதனனை அழைத்துவா. [சேவகன் செல்லுதல்]. குணாகர! அக்கொடியன் தைரியத்தைக் கண்டனையா. அரச வேழமென்றும் மதித்தலுமின்றி அதனைப் பங்கப்படுத்தினன். இனி நான் ஒரு கணமேனும் சும்மாவிருத்தல் தகுதியோ. எப்படியும் இது பழியை அவன் மீது சார்த்தி அவனைச் சிரச்சேதம் செய்துவிடவேண்டியதே. என்ன மதனன் இன்னும் வரவில்லை.

மதனன்:—அண்ணலே! வந்தனம். என்னை அழைத்ததற்குக் காரணம் என்னஉள?

துஷ்டத்:—வணிகன் மகன் சீவோதயன் நம் பட்டத்துயானையைச் சற்றும் அச்சமின்றிப் பங்கம் செய்து நம்மை இகழ்ந்தனனும். இப்பொழுது நீ உடனே சென்று சில வீரரைத் துணைக்கொண்டு அக்கழுதை மகனைச் சிறைப்படுத்தி நம் மயானம்வாழ் ருத்திரிக்குப் பலியிட்டு, அவனுடலை அவ்விடத்தே கழுகு பருந்தினுக்கு விருந்திட்டுவருவாய். சீக்கிரம் செய். ஏதும் யோசனைவேண்டாம்.

மதனன்:—ஆம் ஆம் அவன் மிகவும் கொடியனே இன்னுமவன் உயிரோடிருந்தால் மிகவும் கெடுதியே எப்படியும் அவனைத் தலைத்துவிடுவதே தக்கது. நானிதோ சென்று தங்கள் கட்டளைப்படியே முடித்துவருகின்றேன். [போதல்)

அரசனும் சபையை விட்டுப்போதல்.

### வணிகர் வீதி

சீவோதயனும் பதுமுகனும் வேட்டையாடித் திரும்பிவருத லும் மதனனும் அவனுட்களும் பின்புரமாக வந்து சீவோதயனைச் சிறைப்படுத்தல்

சீவோதயன்:—அடா! மக்சட்பதடிகாள்! இக் காரியமும் உங்கள் வீரத்தனமோ. பின்னின்று முன் செல்பவனை அவனறி யாவண்ணம் பிணைத்தல் நினக்கும் நின் மாதுலனுக்கும் வாய்த்த குணமோ நீவிர் யாவரும் ஒருங்கு திரண்டு என்னொருவன் மீது எதிர்த்துவரினும் நுங்களனைவரை யும் தென்றிசைச் செலுத்தேனோ. என் மனைவி சயிந்தை யை மணக்க விரும்பி என்னை எதிர்த்த மன்னர் பட்ட பாடும், நின் மாதுலன் முகத்தில் மீசையற்ற பேடிமகன் போல் ஓடிவந்த கதியும் நீ அறியாய் போலும். அப்படிப் பட்ட பேதைமக்களாகிய உங்களுக்கு வீரமேது.

மதனன்:—மூண்டமே! வன் வீணில் உன் வீரப்பிரதாபங்களை யெல் லாம் பேசுகின்றாய். நின் சிரயின்னும் ஒரு நாழிகைக்குள் மயானத் துருளப் போகின்றது வீரா! இவன் தாளுக்கும் கரத்திற்கும் தளையிடுவாய். கைசரியாவண்ணம் பிணித் துக் கட்டு. [வீரன் அப்படியே செய்தல்).

சீவோதயன்:—நல்லது மிகவும் சந்தோஷம். உங்களாலாவதொன்று மில்லை எல்லாம் தெய்வச் செயலே. உங்கள் பிணிப்புட் பட்ட இப்போதும் உங்களையாவது அரசனைக் கொன்று அரசைக் கவர்ந்த பாதகனையாவது இத்தருணமே கொல்வ தெளிதல்ல. என்னாசிரியர் கூறிய காலத்திற்கு இன்னும் நாட்கள் பதினைந்திருக்கின்றன எனவே யோசிக்கின்றேன். என்னுயிர்க்கு விபத்துவரினும் குருவாணையைக் கட வேன். நான் இப்பொழுதிறப்பினும் மற்றோர் பிறப் பெடுத்து என்பழியைத் தீர்ப்பேன்.

பதுமுகன்:—நாம் இனி இக்கிருப்பது நன்றன்று. நாம் இப்பொழு தே சயிந்தையிடம் சென்று நிகழ்ந்தன மொழிந்து அவ ளைத் தன் தந்தை வீட்டிற்குச் செல்லும்படிச் செய்து, அவள் தந்தையார்க்கு சீவோதயன் சிறைப் பட்ட செய்தியுரைத்துமேல் நடக்கும் காரியங்களை கவ னிப்பாம். (தொடரும்)

# தஞ்சை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகா நாடு

## சேம்பியன் ஸ்கீம் கண்டிக்கப்பட்டது.

### வேதாரண்யம் (7-1-34)

ஜனவரி 7-ம் தேதி ஞாயிறு மாலை 12-30-மணிக்கு. சட்டசபை அங்கத்தினரும், தஞ்சை ஜில்லா போர்டு தலைவருமான திரு, வி. நாடி முத்து பிள்ளையவர்கள், தஞ்சையிலிருந்து வேதாரண்யம் வந் திறங்கினர். பல ரேஞ்சிலிருந்து வந்திருந்தவர்களும், மகா நாட்டின் வரவேற்புக் கமிட்டியின் தலைவர், கே. ரங்கசாமி ஐய்யங்கார் அவர் களும், பூமாலைகளைச் சூட்டி அன்புடன் வரவேற்றனர்.

பிறகு பலவித மேள வாத்தியத்துடன், ஆசிரிய மானேஜர்கள் புடை சூழ, பெருத்த கூட்டத்துடன் ஊர்வலமாக மகா நாட்டிற் கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் பந்தலுக்கு அழைத்துச் சென்று பல உபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

மாலை 4-மணிக்கு மகா நாடு திரு. வி. நாடிமுத்துப் பிள்ளையவர் களின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது சென்னையிலிருந்து மாகாண ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தின் உபதலைவர், திரு, டி. இ. வரதாச் சாரியார் அவர்களும், ஆரம்பக் கல்வி பத்திராதிபர் பி. வீரராகவன் அவர்களும், பொதுஜனக் கல்வி காரியதரிசி, திரு. ஏ. ஆர். சேஷா சலம் செட்டியார் அவர்களும் விஜயம் செய்தனர். எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனியாருடைய பிரதிநிதியும், ஸி. குமாரசாமி நாயுடு அண்ட் சன்ஸ் கம்பெனி யாருடைய பிரதி நிதியும் பல பாட புத்த கங்களையும். படங்களையும் கண்காட்சியாக அலங்கரித்து வைத்தனர்.

செம்போடை மிராசுதாரரும், ஜில்லா போர்டு அங்கத்தினரு மான, எஸ். ஏ. நாராயண ஐயங்கார் அவர்கள் "நமது நாட்டில் காந்தி மகானைப் போலவும், சிவாஜியைப் போலவும், அறிய, பெரிய வீரர்களாகவும், தியாகிகளாகவும், மக்கள் விளங்கும்படி ஆசிரிய மானேஜர்கள் கல்வியை போதிக்க வேண்டுமென்பதாக ஒரு சொற் பொழிவை நிகழ்த்தி ஆசிரிய மானேஜர்கள் மகா நாட்டைத் திறந்து வைத்தனர். பிறகு வரவேற்புக் கமிட்டியின் தலைவர் திரு. கெ. ரங்க சாமி ஐயங்கார் அவர்கள் ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தின் சார்பாக ஓர் அருமையான சொற்பொழிவை நிகழ்த்தினர்.

பிறகு மகா நாட்டின் தலைவர் திரு. வி. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் தமது கீழ்க் கண்ட தமது தலைவர் சொற்பொழிவை நிகழ்த்தினர்.

பிறகு விஷயாலோசனைக் கமிட்டியில் ஆமோதிக்கப்பட்ட கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்.

1. 1932-33 வருஷத்தில் தஞ்சை ஜில்லா கல்விச் சபையில் பாக்கி நிற்கும் திரவ்விய சகாயத் தொகையை விதாசாரப்படி பிரித்துக்

கொடுக்கவேண்டுமாய், ஜில்லாக் கல்விச் சபைத் தலைவர்களை கேட்டுக் கொள்கின்றது.

2. பாடசாலைகளை இன்னும் திறமையாக நடத்தும் பொருட்டு அட்வான்ஸ் கிராண்டை 3-மாதத்திற்கு ஒரு முறையாக அரசாங்கத்தார் எய்டட் பாடசாலைகளுக்கு கொடுக்க வேண்டுமென்பது.

3. எய்டட் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து உற்சாகமாக வேலை செய்யும் பொருட்டு தற்போதுள்ள டீச்சிங் கிராண்டை எல்லா கிரேட்டிலும் 100-க்கு 50 விகிதம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

4. ஜில்லாக் கல்விச் சபைகளில் ஆசிரிய மானேஜர்களுக்கு தாங்கள் நடத்தும் பாடசாலைகளின் எண்ணிக்கையின் பேரில் குறைந்தது. ரேஞ்சுக்கு ஒன்றாக பிரதி நிதித்துவம் கொடுக்க வேண்டுமென்பது.

5. 1933ஆு நவம்பர்மீ 7-ம்தேதி போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில், பிரசுரம் செய்தபடி தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களுக்கு கிராண்டு கொடுக்கக் கூடாதென்றும் சட்ட திருத்தத்தை அரசாங்கத்தார் அமோதிக்கப்படாது, அவ்விதம் செய்யின் திடீரென ஏக காலத்தில் ஆயிரக்கணக்கான தேர்ச்சி பெற்ற உபாத்தியாயர்களகப்படாதது ஒரு புறமிருக்க அநேக எய்டட் பாடசாலைகள் மூடப்பட்டு ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு ஹானி ஏற்படுமென்பது.

6. ஆரம்பக் கல்வி. அபிவிருத்தியின் காரணமாய் எய்டட் பாட சாலைகள் இந்த ஜில்லாவுக்கு அரசாங்கத்தார் கிராண்டு அலாட்மென்டை அதிகப் படியாக செலவுகள் ஏற்படுகின்றபடியால் குறைக்காமல் சில வருஷங்களுக்கு முன்பு கொடுத்ததைப் போல் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பது.

7. போதனா முறைப் பாடசாலைகளில் இரண்டு வருடம் வாசிக்க வேண்டுமென்பதை ஒருவருடமாக்கி மாணவர்களுக்கும், பழைய மாதிரியே உதவிச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்பது.

8. பாடசாலைகள் நடைபெறும் கட்டிடங்களுக்கு வாடகைகளையும், கட்டிடம் சொந்தமாயிருப்பின் கல்வி அதிகாரிகள் ஏற்படுத்தும் வாடகைகளையும் அரசாங்கத்தை கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றது.

9. போதனா முறையில் தேர்ந்த உபாத்தியாயர்கள் 18-மாதங்கள் சர்வீஸ் செய்து பிறகு தான் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் ரூலை நீக்கி எழுத்துப் பரிட்சையில் தேர்ந்ததும் சர்ட்டிபிகேட்டை இதர பரீட்சைகளில் கொடுப்பது போல் கொடுத்துவிடும்படி கேட்டுக் கொள்ளுகின்றது.



10. தற்போது ஏற்பட்டிருக்கும் பாடசாலைகளை இணைக்கும் ஸ்கீமானது சேம்பியன் ஸ்கீமிலிருந்து சற்றுசேர்ப்பட்டிருப்பினும் காரியத்தில் அந்த ஸ்கீம் நடைபெற பல இடையூறுகள் இருப்பதினால் லோகல் போர்ட் அங்கத்தினர்களும், முனிசிபல் அங்கத்தினர்களும், பாடசாலை மானேஜர்களும், கல்வியதிகாரிகளும், பொது மக்களும் கலந்த ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இந்த புதிய ஸ்கீமை நன்றாக யோசித்து பரிசீலனை செய்து கமிட்டியின் அபிப்பிராயத்தை தெரிவித்த பிறகே இந்தஸ்கீமை அரசாங்கத்தார் அமுலுக்கு கொண்டுவர ஆலோசிக்க வேண்டுமென்பது.

11. பழையபடி ஒரு பாடசாலையிலிருந்து மற்றொரு பாடசாலைக்குப் பிள்ளைகள் மாறுங் காலத்தில் அப்பிள்ளைகளை பாடசாலை சர்ட்டிபிகேட்டுகள் இல்லாமல் சேர்க்க் கூடாதென்பது.

12. தற்போது ஏழைப் பெண்பிள்ளைகளுக்கென கொடுத்து வரும் கஷ்ட சட்டை 1-வது 4 அணா 2-வது 6 அணா, 3-வது 8 அணா, 4-வது 12 அணா, 5-வது ரூ. 1. ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்பது.

13. இம்மகா நாட்டில் நிறைவேறின தீர்மானங்களை அரசாங்கத்தார் கவனித்து அமுலுக்குக் கொண்டுவரும் வண்ணம் ஜில்லாச் சங்கம் தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்பது.

14. ஹையர் கிரேட்டில் போதனா முறையில் பயின்ற ஆசிரியர்களை நேராக எஸ். எஸ். எல். ஸி. பரிட்சையில் பணம் செலுத்தி பரிட்சைக்குச் செல்ல அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டியது.

15. ஜி. ஓ. நெ 1424 (8-10-33)ல் பஞ்சாயத்து மெம்பர்கள் எய்டட் பாடசாலைகளை பார்வையிட்டு குறை குற்றம் கூறலாம் என்ற உத்திரவால் பல எய்டட் பாடசாலைகளை அனாவசியமான தொந்திரவுகள் செய்து பாடசாலைகளை சரிவர நடத்த பல உபத்திரவங்கள் இருப்பதால் அவ்வுத்திரவை அரசாங்கத்தார் நீக்க வேண்டுமென்பது.

16. தற்போதுள்ள பாட திட்டங்களில் மதபோதனை அதிகமாகவும், முக்கியமாகவும் பாடசாலைகளில் போதிக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டுமென்பது.

முடிவில் தலைவர் அவர்கள் ஆசிரிய மானேஜர்கள் குறைபாடுகளை அரசாங்கத்தாரும் கல்வியதிகாரிகளும் சீக்கிரத்தில் கவனித்து நீக்க வேண்டுமென்றும் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்காக தொன்று தொட்டு தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பலவிதக் கஷ்டங்களை எதிர்பாராது மனந்தளராமல் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு உழைத்து வருவது மிகவும் போற்றத்தக்கதென்றும், இம்மாதிரியே ஆசிரிய மானேஜர்கள் உழைத்துவர வேண்டுமென்றும், தன்னாலான உதவியை சட்ட சபையில் வாதாடிச் செய்வதாகவும் "சாம்பியன்" ஸ்கீமை பட்ஜட் செஷனில் கண்டிப்பதாகவும் கூறினார்.

இரவு 8-மணிக்கு வந்தனோப சாரத்துடன் கூட்டம் கலைந்தது.

# சுயச் சந்தஜோதி தைலம்




இத்தைலத்தை மூளைக்கு சதா சூடேற்றிக் கொள்ளும் வித்வான்கள். வக்கீல்கள், ஜட்ஜிகள், பாடகர்கள், உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், எல்லோருக்கும் நல்ல குணத்தைதந்து ஓர் சிறந்த தோழனைப்போல் பக்கபெலனுண்டாக்கும் சக்தி வாய்ந்தது மூளைக்கு நல்ல குளிர்ச்சியும் கண் ஒளியும் மயிர் வழ வழுப்பும், சுகந்த வாசனையும், பித்தாதிக்கத்தாலுண்டாகும், மயக்கம் கண் எரிவு புகைச்சல் காதில் நீர் தங்குதல் புடரிவலி இவைகள் போவதுடன், வியர்வையாலுண்டாகும் நாற்றங்கள் மூலச்சூடும் தணியும், கண்களிலிட்டால் வெள்ளெழுத்துமாறும், மயிர் நரை நீங்கும், ரொம்பவும் அநுபவம்.

எமது விலாசம்:—

ஜெனரோக, நிவாரண
வைத்தியசாலை,
சித்த ஆயுர்வேத பண்டிட்,
எம். பாலசுந்தரம் பிள்ளை,
நெ. 24, ஜீல்ஸ் தெருவு,
ஜி. டி. மதருஸ்.


---


தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியது. ரிஜிஸ்டர்ட் லேடி டீசெட் மார்க் போட்ட

## ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி

இது தமிழ் நாட்டில் 3,75,000 ஜனங்களால் வாசிக்கப்பட்டு எங்கும் பிரபல்ய மடைந்தது. இங்கிலீஷ் பேசவும், எழுதவும், படிக்கவும் கற்றுக் கொள்ளக்கூடிய புத்தகம் இதுதான் 872-பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் சீமை காலிகோ பயிண்டுடன் கூடியது

விலை ரூ. 2 0 0    ஷை தெலுங்கு புஸ்தகம் ரூ. 2 0 0
ஷை கன்னட புஸ்தகம் ரூ. 2 0 0

ஆரம்பக் கல்வி புத்தகசாலை,
94-95. புதுத் தெரு, மண்ணடி மதராஸ்.



# சித் சுகாநந்த தில் குஷ் குளிகை




இக் குளிகையின் குணம் கிழவர்களும் வாலிபர்களாக வாழ்ந்து, சுகபோகத்தை அநுபவிக்க நிகரற்றது. முதல் இடுப்பு வலியைபோக்கும். நரம்புத் தளர்ச்சியை பிகுவுண்டாக்கும். இழந்த ஆண் தன்மையை மீண்டும் உயிர்பெறச் செய்யும். சரீர காந்தி அழகு சுறு சுறுப்பும், மூளைக்கும் இருதயத்திற்கும், நாடி நரம்புகள் யாவற்றிற்கும், நல்ல ரத்த ஓட்டத்தை பரவச் செய்யும். புத்தி கூர்மையை உண்டாக்கும். இந்திரியம் கெட்டிப்படும். காலை மாலையாக 20 நாள் விடாமல் 40 குளிகைகள் சாப்பிட வேண்டியது. அவசியம் இதை விரிவாய் எழுதக் கூடாதென விடுத்தோம்.

20 நாள் சாப்பிடும் 40 குளிகை விலை ரூ. 7-8-0

ஜெனரோக, நிவாரண வைத்தியசாலை,
சித்த ஆயுர்வேத பண்டிட், எம். பாலசுந்திரம் பிள்ளை,
நெ. 24, ஜீல்ஸ் தெருவு ஜி. டி. மதருஸ்.



உலக பிரசித்தி பெற்ற
ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,

# பட்டணம் பொடி


காரம், மணம், குணம், நிறம் முதலிய வாடை கமழுகின்றன.
ஒரு முறை வாங்கி உபயோகித்தால்
அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,
புகையிலை கமீஷன் ஏஜெண்டுகள், அன், பொடி வியாபாரிகள்,
2-21, பாரிஷ் வெங்கடாஜல ஐயர் தெருவு,
தபால் பெட்டி நெ. 189, சென்னை.

# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

40 மாத்திரைகள் அடங்கிய



## மதனமஞ்சரி

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

இனாம்! வைத்திய வித்தியா இனாம்!!

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் செலவு இல்லாமல் அனுப்பப்படும்.

மதன மஞ்சரி பார்மஸி, 1-94 சைனாபஜார் ரோட், மதராஸ்.



## சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

# ஆதங்க நிக்ரஹக் மாத்ரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும். 32 மாத்ரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.

இனாம்! இனாம்!! இனாம்!!!

'இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி'

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்

ஆதங்க நிக்ரஹக் ஔஷதாலயம்

26, பிராட்வே, மதராஸ்.



உள்ளூர் வெளியூர் வாசிகளுக்கு முக்கியமாய்க் காண்பிக்கவும்.

சங்கீதம் கற்கவேண்டுமா?

ஹார்மோனியப் பயிற்சி செய்ய வேண்டுமா?

அப்படியானால், ஹார்மோனிய வாத்திய நுட்பங்களைச் சந்தேக விபரீதமறத்தெள்ளிய நடையில் எளிதில் கற்குமாறும் ஆண், பெண் இருபாலரும் எளிதில் உணருமாறும் எழுதியுள்ள தமிழ்ப் புத்தகங்களாகிய,

"சங்கீத ரஞ்சனி"

"சங்கீத அலங்காரம்"

என்ற புத்தகங்களை உடனே வாங்கி உபயோகிக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| சங்கீத ரஞ்சனி முதற்பாகம் | விலை | ரூபா | 3 | 0 0 |
| சங்கீத அலங்காரம் ,, | விலை | ரூபா | 3 | 8 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

ஆரம்பக் கல்வி புத்தகசாலை,

94-95, புதுத் தெரு, மண்ணடி, மதராஸ்

# எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர்: மணி திருநாவுக்கரசு முதலியார்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 2 | 6 |
| இரண்டாம் ,, | .... | 0 | 3 | 0 |
| மூன்றாம் ,, | .... | 0 | 4 | 6 |
| நான்காம் ,, | .... | 0 | 5 | 6 |
| ஐந்தாம் ,, | .... | 0 | 6 | 6 |

## பொற்காலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 5 | 0 |
| இரண்டாம் ,, | .... | 0 | 6 | 0 |
| மூன்றாம் ,, | .... | 0 | 8 | 0 |
| நான்காம் ,, | .... | 0 | 9 | 0 |

## இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ.,எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |

## சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ. எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் ஐ எஸ். ஏ.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் வகுப்பு மூன்றாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## அறநெறி விளக்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| 6-ஆம் ,, மூன்றாம் புத்தகம் | 0 | 7 | 0 |

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்மந்த முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 | [illegible] | 0 |
| ,, அதிபத்த நாயனார் | 0 | 2 | 0 |
| ,, ஏனாதிநாத நாயனார் | 0 | 3 | 0 |
| ,, நந்தனார் | 0 | 5 | 0 |

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

பி. வீரராகவன், அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு, நெ. 94-95 இல்லத்தில் "அஸோஸியேஷன்", அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.